நூல் 34

சீகாளத்திப் புராணம்

7. கண்ணப்பச்சருக்கம்
8. நக்கீரச்சருக்கம்

துறைமங்கலம்
சிவப்பிரகாச சுவாமிகள்.

பக்கம்	பாட்டு	வரி	பிழை	திருத்தம்
5	23	2	பாய் பெய்து	பால் பெய்து
18	89	3	குலத்தொடும	குலத்தொடும்
23	112	3	செழும்பேர்தும்	செழும்போதும்
35	175	3	மொய்தழ	மெய்தழ

உ

சிவசண்முகன் றுணை

ஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் திருவடிவாழ்க.

சீகாளத்திப் புராணம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்தது

ஏழாவது

கண்ணப்பச் சருக்கம்.

கலித்துறை.

மதியின் மானிளங் கன்றினை வரிசிலைக் குறவர்க்
குதலை மென்மொழிப் பேதையர் பச்சிளங் கொடிப்புல்
பதும மென்கையா னீட்டுபு பரிவுட னழைக்கும்
புதுமை கொண்டவெற் புடுத்தது போத்தப்பி நாடு 1

தாவி லத்திரு நாட்டசீ றூர்களிற் றலைமை
மேவி நீணறுஞ் சந்தன நிரைத்துவெண் கவரி
மாவின் மென்மயிர்க் கற்றைவேய் சிற்றில்கள் வயங்கி
யோவில் சீருடைப் பூரெனக் குறிச்சியொன் றுண்டால் 2

வேடர் மங்கையர் முன்றிலி னின்றபூ வேங்கை
யாடு கொம்பரிற் றொடுத்தபூந் தொட்டிலி னமர்ந்த
தேட ரும்பசுங் குழவிதா லாட்டுசெவ் வழியின்
பாடல் கேட்டுமா மயிலுறங் குவமலைப் பக்கம். 3

இரும்பிற் செய்தன திண்புயத் திறவுளர் மைந்தர்
விரும்பப் பின்றிரிந் திளம்புலி கற்குமால் வீரம்
பெருங்கைச் செம்புகர் முகத்திளம் பிடியினம் பிணைபோற்
கருங்கட் செய்யவாய்க் குறத்திய ரணிநடை கற்கும் 4

வென்றிக் குஞ்சர மத்தக முத்தமும் வேயிற்
பன்றிக் கோட்டிடை வருமொளி முத்தமும் பரப்பி
முன்றிற் பற்பல சிற்றில்கள் செய்யுமான் முனியாக்
குன்றிச் செம்மணி யணியுடைப் பேதையர் குலமே. 5

நெடிய சந்தனக் காற்கரி மருப்பித ணின்று
கடிகொள் பைந்தினை கவர்பசுங் கிளியினங் கடியு
மடநல் லாரிசை கேட்ட லு மாடக நல்யாழ்
தடவல் விட்டுவிச் சாதரர் செவித்துணை தாழ்ப்பார். 6

இனைய பற்பல பெருவள மெய்துயவ் வூரிற்
குனியு நோன்சிலைக் குறவர்தங் குஞ்சிதோய் கழற்கால்
வனச ராதிப ஞகனென் பானிகல் வாட்கண்
மனைவி தத்தையென் பாளொடு வாழ்ந்தினி திருந்தான் 7

வாழு நாளின்மென் மழலையஞ் சொன்மக வின்மைத்
தாழ்வி னனனி மனங்கவல் றிறவுளர் தலைவன்
வீழி வாய்க்கய லரிமதர் நெடுங்கண்வேய் மென்றோ
ளேழை நுண்ணிடை மனைவியோ டின்னண மெண்ணும் 8

கண்ணில் யாக்கையுந் திங்களில் கங்குலுங் கண்போ
லண்ணன் மந்திரி யில்லர சாட்சியு மருளிற்
றிண்ணெ னெஞ்சமும் புலவரி லவையுமொண் டீம்பால்
வண்ண வாயிள மக்களில் வாழ்வுமொப் பாமால். 9

சேற ளைந்தமென் சீறடித் தளிரொடு தீம்பாற்
சோற ளைந்தகைத் தாமரை யோடுசெந் துகிர்வா
யூறு நீர்நனை மார்பினோ டிளமகா ருந்தி
யேறு மின்பமுள் ளதனையே யுடம்பென விசைப்பார் 10

அரிகொள் பொன்புனை கிண்கிணி தண்டையோ டணிந்த
தருண மென்றளிர்ச் சீறடித் தளர்நடைச் சிறுவர்
மருவ ருதசெவ் வாம்பல்வாய் மழலையா ரமுதம்
பருகி லாச்செவி பாவையின் செவியெனப் படுமால் 11

இம்மை யின்பொடு மறுமையி னின்பமென் றிரண்டு
மம்மென் மைந்தரை யில்லவர்க் கில்லைமற் றதனா
லெம்மை யாளுடை முருகவே ளடிமல ரிறைஞ்சிச்
செம்மை நன்மகற் பெறுகுவ மெனச்சிந்தை செய்தான் 12

சிந்தை செய்தவன் வரைபக வெறிசுடர்ச் செவ்வே
லெந்தை வாழ்வதற் கேற்றதோர் சினகர மியற்றி
நந்து பூசனை நடத்துபு நடிக்குமா மயிலும்
வெந்தி றற்கொழுஞ் சூட்டுவா ரணங்களும் விடுத்தான். 13

இரலை தொண்டகந் துடிமுதற் பறையொலி யீண்டத்
திருவி ழாவயர்ந் திலங்குசெங் காந்தளந் தெரிய
லுருவ வேலனைக் கூயகன் களனணி யுறுத்து
வெருவ ருந்தகை வெறியயர் வித்தனன் விழைவால். 14

கடிகொ ளவ்வெறி யாட்டிடை யாவருங் காணச்
சுடர்செய் வேற்படைக் குருசிலவ் வேலன்மேற் றோன்றி
யோடிவி லன்போடு செய்தவிச் சிறப்பினுக் குவந்தேம்
படியெ லாம்புகழ் மகற்றரு குவமெனப் பகர்ந்தான். 15

பகர்ந்த சொல்லமு தந்துணைச் செவிகளாற் பருகி
யுகந்து மாமகிழ் வெய்திய தத்தையு முவகை
மிகுந்த நாகனுந் திருவடி மலர்மிசை வீழ்ந்து
புகழ்ந்து நின்றனர் மறைந்தன னருட்கடற் புனிதன். 16

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பின்னரவ் வெறியாட் டாளன் பெறப்பெருஞ் சிறப்புச்
[செய்து
துன்னிநின் றகலாச் சுற்றத் தொகைக்கெலா மகிழ்ச்சி
[செய்து
தன்னமர் மனையுந் தானுந் தளிர்த்துள மினிதி ருந்தா
ரன்னமன் னவள்சின் னாளி லரும்பெறற் கருப்ப முற்றாள்.

உண்டுகொ லென்னு மைய மொழிந்தது மருங்குல் கோங்கின்
வண்டுறு முகுள மென்ன வனமுலை முகங்க றுத்த
பண்டுவ மைக்கு டைந்த பசியவேய்க் குலமு வப்பத்
துண்டவெண் மதிநு தற்குத் தோட்டுணை மெலிந்தவன்றே

மகவுடன் வயிற்றி ருந்து வளர்புகழ் பரந்த தென்ன
மிகவுடல் விளர்த்த துண்டி வெறுப்புவந் ததுபு ளிங்கூ
ழுகனமர்ந் துண்ணும் வேட்கை யடைந்தது நடையோய்ந்
[தன்று
தகைமலர் மென்பூங் கோதை தான்பெருஞ் சுமையா
[யிற்றால். 19

கலிவிருத்தம்.

இன்ன வாறு வயாநலி வெய்திய
கன்ன லின்மொழிக் காரிகை பெற்றனண்
மன்னு தங்குல மாசு துடைத்திடும்
பொன்னி னன்ன புதல்வனை யென்பவே. 20

பெறல ருஞ்சேய் பிறந்தெனக் கானவ
ரிறைம கிழ்ச்சி யிருங்கடன் மூழ்கினன்
பொறையு யிர்த்தவப் பொற்றொடி யெய்திய
வுறும கிழ்ச்சி யுரைப்பவர் யாவரே. 21

நண்ணு மோகையி னகன் பெருஞ்சிறப்
பண்ணல் வேற்படை யையனுக் காற்றினன்
பெண்ணு மாணும் பெருமகிழ் வெய்தலா
னெண்ணெ யாட்டணி யெங்குநி கழ்ந்ததே. 22

தரவுகோச்சகக்கலிப்பா

மணியிணைமண் ணுறுத்தாங்கு வாசவான் புனலாட்டிப்
பணைகொள்குவி முலைபிலிற்றும் பாய்பெய்து நிலந்தேய்த்த
வணிதிலகஞ் சிறுநுதலி லணிந்துமுலைப் பாலூட்டி
யிணையில்கரி மருப்பினிய லெழிற்றொட்டி லேற்றினர். 23

பூங்குழல்வே னெடுங்கண்ணாள் புனலாட்டிப் புனைந்துதர
வாங்குசிலை மறவர்கோன் மணிமகனைத் தடக்கையாற்
றாங்குபுதிண் ணென்றிருந்த தன்மையாற் றிண்ணனெனத்
தேங்கியபே ருவகையொடுந் திருநாமஞ் சாத்தினன். 24

திண்வளருங் கரிமருப்பாற் செய்யசைபூந் தொட்டி
[லின்மேல்
விண்வளரும் புனிற்றுநிலா வெண்மதியின் வளர்மைந்தன்
றண்வளரும் பாலாழித் தரங்கமிசை நாகணையிற்
கண்வளருந் துழாயலங்கற் கதிர்மணிவண் ணனைப்
[போலும் 25

மலயமா ருதப்புகுந்த மடுக்கமல மெனநீரிற்
கலைகெழுமா மதியமெனக் கவின்கொடிரு முகமசைய
விலவிதழ்வா யமுதொழுக வெழின்மார்ப மிசையெடுத்துச்
சிலைமறவர் குலதிலகஞ் செங்கீரை யாடிற்றே. 26

தருணமதி நிலத்தினிடைத் தவழ்வதெனத் தவழ்தந்து
பொருதிரைவார் கடலாடைப் புவிமகள்செய் புண்ணிய
[த்தாற்
றிருவடிமா மலர்சுமப்பச் சேர்த்திளமென் னடை
[பயின்றான்
குருதிவடி யிலங்கிலைவேற் குகனருளாற் பெறுமைந்தன்

குன்றிவட மரைதயங்கக் கொடுவரிவள் ளுகிர்க்கோவை
நன்றுகழுத் தினிலிலங்க நனந்தலைச்சீ றூர்முழுது
மொன்றுசிறு ரொடுசிறுதே ருருட்டியும்பே தையரிழைத்த
துன்றுமணிச் சிற்றில்லந் துடைத்தும்விளை யாட்டயர்ந்
தான் 28

ஆர்நாரின் றிண்கயிற்று லமைச்சிறுகோல் வளைத்தவிலுங்
கூர்வாய்முண் ணுனிபதித்த கோற்கோலுங் கைக்கொண்டு
கார்மேனி மைந்தரொடு கான்புகுந்து கொடுவிலங்கி
னேர்வாய்மென் குருளைபல வெய்தல்செய்தான் விளையாட்
[டால் 29

வாமிளமான் கன்றுகளும் வள்ளுகிர்நோன் றாட்புலியின்
கோமளநற் குருளைகளுங் குடாவடியின் குட்டிகளுந்
தாமிழைத்த முற்றவத்தாற் சவரர்குலா திபன்பயந்த
மாமகனார் கைப்பட்டு வளர்ந்தவற்றிற் களவில்லை. 30

இவ்வகைய விளையாட்டோ டிளமைந்தன் வளரும்நாட்
கைவலிய சிலைவிஞ்சை கற்பிக்கும் பருவம்வரத்
தெவ்வடுதோட் குன்றவர்கோன் றேயத்து மறவரெலா
மவ்வுழிவந் துறக்கூட்டி யடர்சிலையின் விழாநடத்தி. 31

பின்புசிலை யாசாற்குப் பெருஞ்சிறப்புச் செய்தடிக
ளென்பழைய குடிநிறுத்திவ் விளையோற்குச் சிலைக்கல்வி
யன்பினொடு கொடுக்கவென்று னதற்கிசைதொல் லாசிரிய
னன்பகலில் வரன்முறையே நற்சிலைகைப் பிடிப்பித்தான்.

முற்பிறப்பிற் பல்பெரும்போர் முடித்தசிலை விஞ்சையெல்லா
மற்பழுத்த குவவுத்தோள் வனசரர்தம் பெருமாற்கு
விற்பிடித்த காலத்தே விளங்கியதஞ் சனம்விழியிற்
பொற்பவிட்ட பொழுதேகீழ்ப் பொருள்வைப்புக்
[காண்பதுபோல். 33

அறுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்

கொள்வலிச் சிலையின் விஞ்சை குறைவற நிரம்பிக் காளை
முள்ளெயிற் றரவு யர்த்தோன் முரட்படை முழுதுங்
[கொன்ற
வெள்வயப் புரவித் திண்டேர் விசயன்வேட் டுவக்கு லத்தி
னுள்ளவ தரித்தான் கொல்லென் றுரைதர வொழுகு
[நாளில். 34

சேட்டிளஞ் சிங்க மன்ன செம்மலைத் தந்தை கன்னி
வேட்டமா டுவித்த லாற்ற விழைந்தன னதனை நன்கு
கூட்டக்காட் டுறைதெய் வங்கள் கொள்பலி கொடுப்ப
[வுன்னிக்
கோட்டுறு வரிவில் வேடர் குழுவொடு வனத்திற்
[புக்கான் 35

கலிவிருத்தம்

புக்கவன் குழைசிலைப் புளிநர் யாரையு
மைக்கருங் கயல்புரை வாட்கண் ணூரொடு
தொக்கிருஞ் சுனைப்புன ரேய்ந்து வம்மெனு
வக்கணந் தானுநீ ராடப் போயினன். 36

குரைகட லின்னுமக் குறிய மாதவன்
பருகினும் பருகுமென் றஞ்சிப் பாழிமால்
வரையரண் புகுந்தென வயங்கு பூஞ்சுனை
தெரிவைய ரொடுமறச் செல்வ ரெய்தினர் 37

ஒலிவளைக் கையினு ருற்ற போதிரி
பலவிதப் பறவையின் பறையின் காற்றினுன்
மலிசுனைக் குவளைக ளசைதன் மாதர்கண்
ணலிபகைக் குடனனி நடுங்கல் போலுமே. 38

மற்றவர் புகுதலின் மணங்கொள் பூவினுட்
டுற்றவண் டிரிதர றாய நீர்ச்சுனை
யற்றைநாள் வரையும்புக் காடு வார்ப்பெரு
துற்றநீள் பழிவிடுத் தோடல் போலுமே. 39

மேற்படி வேறு.

செய்ய தாமரைத் தேமல ரன்னலா
ரைய வாண்முகத் தோடுற வாடின
மொய்ய ரும்புகண் முத்தந் துயல்வரூஉம்
வெய்ய கொங்கை விருந்தெதிர் கொண்டவே. 40

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தாமரை முகத்தர் குவளையங் கண்ணர் சைவலக் கூந்தலர்
[வள்ளைக்
காமரு குழைய ரன்னமென் னடையர் கமலநீள் வளைய
[மென் றோளர்
நேமியம் பறவைக் குவிமுலைத் தடத்தர் நிறையித
[ழாம்பலம் வாய
ராமட மகளிர் நீரைவிட் டகலா ததினமர்ந் தாடின
[ரன்றே. 41

இவ்வழி மூழ்கி வேறிடத் தெழுவ லென்னைநீர் காண்கென
[மூழ்கி
யவ்வகை யெழுந்த சிற்றிடைப் பெருந்தோ ளணியிழை
[யளகவாண் முகத்தைச்
சைவலத் தருகு மலர்ந்தசெங் கமலத் தனிமல ரெனமனத்
[தெண்ணிக்
கொவ்வைவாய் மகளி ரெழுந்தில ளென்று குளிர்புனற்
[பரப்பெலாம் பார்ப்பார். 42

கலிவிருத்தம்.

முரிதி ரைப்புனன் மூழ்கி யெழுதரு
மரிம தர்க்கணு ளங்கலுழ் வாண்முக
மிரைதி ரைக்கட லின்கண் ணெழுதல்செய்
விரிக திர்க்கலை வெண்மதி யொத்ததே. 43

அன்ன மென்னவந் தீம்புன லாடிய
பொன்னி னன்ன பொறிசுணங் கம்முலைக்
கன்ன வின்மொழி யார்கரை யேறினார்
துன்னு பைந்தழைத் துகடுத் தாரரோ 44

அங்கு நின்றக லங்கையற் கண்ணினர்
மங்குல் கண்படு மாமலர்ச் சோலையுட்
பொங்கு மோகையிற் போய்க்கட வுட்கலர்
கொங்கு நாண்மலர் கொய்யத் தொடங்கினர். 45

தம்மை மஞ்ஞை தழைசிறை மென்குயி
லம்மென் பூவை கிளியென் றறைந்திடன்
மெய்ம்மை யாக விளங்கிழை யார்விரை
விம்மு பூந்தரு மீமிசை யேறினர். 46

கொங்கு தங்கிய கோங்கலர் கொய்யுமோர்
மங்கை கொம்பின் மறைந்து நின்றுளெழில்
பொங்கு வெம்முலை பூமுகி ழாமென
வங்கை கொண்டுதொட் டன்மையின் வெள்கினள். 47

கிராதர் தங்குலக் கிஞ்சுக வாய்மலர்
விராய வோதியர் வேங்கைமே னின்றனர்
குராவ லாமற் குடைந்தளி பாடுபூம்
பராரை வேங்கையும் பாவைகள் பூத்தென. 48

பைய கண்ணியோர் மங்கையோ ராடவன்
கைய டிக்கவின் காணிய மாதுநீ
செய்ய விச்சினைத் தேமல ரெட்டுபு
கொய்ய வல்லைகொ லென்றதுங் கூசினள். 49

வீவி லாற்றலோர் மீளி யொருநடை
யோவ மன்ன ளுயர்சினைப் பூப்பெறத்
தாவல் கண்டதைத் தாழ்வித் தனனவ
ளாவி யன்னவ ளாய்மலர் சிந்தினள். 50

மாதர் தம்மடி வைத்தலிற் பற்பல
வீத தைந்த விதமறிந் தாரல
ரீத சோகநா மேறிய பின்மிகப்
போது கொண்ட புதுமையென் னென்றனர். 51

வடுவ கிர்க்கணற் றம்மொடு மாறுகொள்
படியி னுலிடம் பார்த்து வளைந்தெனக்
கடிகொள் வண்டின் கணங்கள் மணங்கமழ்
துடிகொ ளுண்ணிடைத் தோகையர்ச் சூழ்ந்தவே. 52

தாத ளைந்தளி தாழிசை பாடுதண்
போது கொய்த புதுத்தளிர் மேனியார்
காத லன்பிற் கணவரோ டெய்தினர்
தீது தீர்க்குமத் தெய்வ நிலையமே. 53

கந்த மாருக் கடிமலர்ப் பைஞ்சுனை
யந்த ணீர்படிந் தவ்வுழி யெய்தினான்
மந்த ராசல மென்ன வளர்ந்ததோ
ணந்து பேரிசை நாகன் கிராதர்கோன். 54

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

விரிமலர்த் தொடைக ளானும் விளங்குவெண் கவரி யானும்
வெருவரு தெய்வம் வாழும் வீழுடை விலங்கு நீள்கோட்
டிருள்படத் தழைந்த கோளி யெழில்பெற வணிந்து பூசை
புரிபவற் கூவிப் பூசை புரிவித்தான் வரிவி னாகன். 55

கானக முழுதும் வாசங் கமழ்தரக் குக்கி லத்தி
னீனறும் புகையெ ழுப்பி நெடுநிலங் குருதி பாய
நானெடுஞ் செவிய கோட்ட நண்ணிய திரிம ருப்பி
னூனமொன் றுனு மில்லா வுயர் விடை பலப டுத்தான்.

தேன்பழங் கிழங்கு தொப்பி செறியமை யரிசி யட்ட
வான்பதந் தினையின் மாவை வனத்தின்வா லரிய நன்மா
மான்பயம் பெய்த மைத்த வல்சிதேக் கிலையிற் பெய்து
கான்பயில் கடவுட் கேற்றிக் களித்தனன் றேவ ராளன்.

மறவமெல் லணங்க னாரும் வனதெய்வம் பராய்வ ணங்கி
முறையறி தேவ ராளன் முழுவிடைக் குருதி தோய்செந்
நிறமுறு சேடை சாத்து நெற்றியர் தெய்வ முண்ட
வறுசுவை யுண்டி யெல்லா முண்டுளங் களித்தா ரன்றே.

வெடிகுரற் சிலைக்கைச் செங்கண் வேடரும் பவளச்
[செவ்வாய்த்
தடமலர்க் கருங்க ணாருந் தசும்பினு ணிறைத்து வைத்த
வடிகொள்கட் டேற லங்கை மடக்குபு நிறைய வுண்டா
ருடைநடை சொற்கள் சோரா வொருவர்மே லொருவர்
[வீழ்ந்தார். 59

சிற்றிடை யொருத்தி தைத்த தேக்கிலைத் தேற லேந்தி
மற்றத னகந்தோன் றுந்தன் மதிமுக நோக்கி யுண்டாள்
கற்றையங் கதிர்வெண் டிங்கள் கள்ளொடென் வயிறு
[புக்கின்
றிற்றது நிலவு நம்மூர்க் கினியிலை யுண்மை யென்றாள். 60

களிதரு தேற லுண்டு களித்தியேற் பருதிச் செல்வ
விளிவினின் வெம்மை யாறி வெண்ணிலாத் திங்கள் போலக்
குளிர்கதிர் பெறுவை யீவல் கொள்கெனப் பிழிய லேந்தி
யிளிமொழி யொருத்தி வானத் தியல்சுட ரழைத்து
[நின்றாள். 61

செறிதொடி யொருத்தி யுண்ட தேம்பிழி மயக்கந் தன்னாற்
பிறனொரு வனைத்தன் காதற் பிரிவருங் கொழுந னென்றே
யிறுகிள முலையழுந்த விறுகுறத் தழுவி னாளக்
கறைகெழு வேலி னனக் கள்ளினைப் பலபு கழ்ந்தான். 62

கருங்கணா ளொருத்தி தன்வாய்க் கடைவழி நுரைவேட்
[டெய்துஞ்
சுரும்பினை வளைக ளார்ப்பத் தோன்றியங் கையா னேச்சி
விரும்புநின் பெண்டிர் பாற்போய் விம்மவாய்
[பருகென் றாடி
வருந்தலை மகனே டேடி வைதல்போல் வைது நின்றாள்.

மணங்கமழ் மலர்து தைந்த வஞ்சியங் கொடியி னைத்தன்
வணங்கிடை யவளென் றுன்பூ வாயைத்தே னொழுக லஞ்சி
யணங்குநீ திறந்தி டாயே லளியனே னுய்வ னோவென்
றுணங்கிய மனத்தான் றாழ வுறுதவன் களிப்பு மிக்கான் 64

உண்கடுங் கண்ம யக்க மொழிந்தபிற் கணவ ராட்டப்
பண்படு கிளவி நல்லார் படர்முலை வடம்பி ணங்கக்
கண்கொள லருநு சுப்புக் கவன்றழ நுதல்வி யர்ப்ப
விண்பொரு சிலைய வாலின் வீழூச லாடி னாரால் 65

பொரிமல ரனைய புன்கம் புதுநிழற் புளினந் தோறும்
விரிகதிர்ச் செஞ்ஞா யிற்றின் வெயில்புகாப் பொதும்பர் [தோறுந்
தருமிடை யடுக்க றோறுந் தமாலநீ ளரங்கந் தோறும்
வரிசிலை மறவர் செவ்வாய் மறத்தியர் போக முண்டார்.

மீமிசை நின்ற சைந்து விழுமணி யருவி பார்த்துங்
காமரு மணிக்க லாபக் களிமயி லாடல் கண்டுந்
தேமலர் வனத்து லாயுஞ் சிலம்பெதிர் கூய ழைத்து
மாமதி முகத்தி னார்தம் மகிழ்நரோ டாடி னாரே. 67

இன்னண மெங்கு மாடி யெய்திய சிலைவல் லாரு
மின்னிடை யழுதி ரங்க வீங்கிய குவவுக் கொங்கைப்
பொன்னனார் தாமுஞ் சூழ்ந்து போதர வனத்தி னீங்கித்
தன்னம ருடுப்பூர் புக்கான் றடக்கைமால் யானையன்னான்

மற்றைஞான் றருக ழைத்து மைந்தனை யைய கேட்டி
யிற்றைநாண் முதலா நீயே யிறவுளர்க் கிறைவ னாகிப்
பற்றலர் முனைமு ருக்கிப் பகைப்புலங் கவர்ந்து கொற்றம்
பெற்றுமா வேட்டை யாடிப் பெரிதுவாழ்ந் திருத்தி [யென்றே. 69

வழிவழி வந்த வெற்றி வரிசிலை கைக்கொ டுத்துக்
கழிபெருங் காத றன்னாற் கன்னவி ரேண்ணெ ழுங்கத்
தழுவிநங் கடவுட் செவ்வே டன்னரு டுணையாச் சென்று
மழவிடை கன்னி வேட்டம் வாய்த்துடன் வருக
[வென்றான். 70

என்றதன் றாதை பொற்று ளிறைஞ்சுபு விடைகொண்
[டன்னை
தன்றிரு வடிப ணிந்தான் றாயெனைப் பெற்ற தாயே
மன்றலங் களிறே யிங்கு வருகென வெடுத்துப் புல்லிக்
குன்றுறழ் முலைப்பால் சோரக் குழைந்துநெஞ் சுச்சி
[மோந்தாள். 71

போகுகா னெறிக ளெல்லாம் புதுமலர்த் தண்ணென்
[சோலை
யாகவே புகுந்து வேட்ட மாடிமுட் கிழியு மின்றிச்
சேகுநோன் சிலையா ரோடுந் திரும்புக கண்ணே றின்றி
மேகமே யனையா யென்று வெண்பொடி சாத்தி னாளால்.

தாயடி மறித்துந் தாழ்ந்து தரும்விடை கொண்டு நீங்கி
மேயநீ னிறங்கொள் கச்சை விசித்துடை வாளும் யாத்திட்
டாயிளந் தளிர்தொ டுத்த வலங்கலங் கண்ணி வேய்ந்து
மாயவன் றெடுதோ ளெட்டு வரிசிலை யெடுத்துக்
[கொண்டான். 73

மலர்தலை யுலகில் யார்க்கும் வணங்கிலாக் கொடும ரத்தைக்
குலவரை யனைய தோளான் குணங்கொளீஇ வணங்கு
[வித்தான்
வலிகெழு சிலைகு ழைக்கும் வன்மைவான் குடிப்பி றந்தார்
சிலர்கொடு மரம்வ ணக்குஞ் செயலிறும் பூது கொல்லோ.

இருமுது குரவர் கேளா வீண்டிய மயிர்பொ டிப்பத்
தருமிசைப் பறவை யெல்லாந் தனித்தனி வெருவி யோட
வெருள்கொடு விலங்கி னீட்டம் வேறுவே றிரிதல் செய்ய
வரைபொரு தோளி னன்றை வந்துநா ணெலிசெய் தானல்.

வில்லின ரம்பி னர்வெவ் வெடிபடு குரலர் காலிற்
செல்பவர் மின்னு வாளர் செறிமழை மேக மன்னர்
கொல்லெறி பிடித்து ரத்து குத்துவெட் டரியெய் யென்னுஞ்
சொல்லினர் தணியாச் சீற்றத் துப்பினர் சூழச் சென்றான்

கணைபிற கொழிய வோடுங் கடுப்பின கொடுங்கூர்ம் பல்ல
தணிவரு சினத்த வேட்டந் தனித்தனி யாட வல்ல
வணியெயிற் றழல்வெஞ் சீற்றத் தரியின்மேல் விடினுஞ்
[செல்வ
பிணிதொடர் பாசத் தோடு பெருவலி நாய்கள் சென்ற.

வலத்தினு மிடத்து முன்னும் பின்னரு மாறி மாறிக்
கொலைத்தொழிற் சுருள்வர னீணுக் கொடுஞ் செவி
[ஞமலி செல்ல
வுலப்பில்பே ராற்றல் வேட ரொடுவிரை துவலைக் கண்ணி
மிலைச்சிய வேடர் வேந்தன் வேட்டையங் காடு புக்கான்.

பலபல விலங்கி னீட்டம் பயிலிட மறிந்து சுற்றும்
வலிவலை சூழ்ந்து சேணில் வழியொதுக் கியபின் வேடர்
கலிகெழு துடிகள் பம்பை கடுங்குர லிரலை யாதி
யொலியெழு வித்து மாக்க ளுறுவலை புகத்து ரந்தார். 79

புக்கபிற் றாமும் புக்குப் புகுவழி யோடியெ றிந்து
மிக்கவல் லுழுவை கேழல் மிடைமயிர்க் கரடி முன்னாத்
தொக்கபல் விலங்கின் பார்வை சூழ்வலைப் பரப்புள்
[விட்டார்
மைக்கருஞ் சிலைக்கை வேடர் வயின்வயின் மறைந்து
[நின்றார் 80

கலிவிருத்தம்.

விட்ட பார்வையின் விளியி னாலவண்
கிட்டி வந்தமான் கிளையெ லாமுடன்
பட்டு வீழ்தரப் பகழி தூவினார்
மட்டி லாவலி வல்வில் வேடரே. 81

காலிற் செல்லுநாய்க் கணந்த டுத்தலாற்
சாலச் சீறுபு தடையுட் பட்டமா
நீலக் குன்றொடு நிகர்க ளிற்றினம்
வேலிற் குத்தினார் சிலவர் வேடரே. 82

மேற்படி வேறு.

மிடைசெடியிடை மறைமறவர்கள் விடுகணையுட லுருவப்
படுதலுமய லுறுகொடுவரி பாய்தந்ததென் றதனைச்
சுடுதழலடு வெகுளியினொடு தொடர்குடர்சரி தரவெண்
டடமுனை வளர் பிறையெயிறுறத் தாக்கியதொரு கருமா.

பரியவரைமர நிரைமறைவரி படுசிலைமுர ணுரவோர்
பொருவிரைசர முருவியவுடற் பொருவருமொரு கருமா
வெரிபுரைதரு பெருவெகுளியோ டெய்கணைவழி போயவ்
விருடருமர முரிதரவுரு மெனத்தாக்கிய தன்றே. 84

எழுவுடனெழின் முழவிழிவுசெய் தெழுபெருவலி கெழு
[தோண்
முழுமறவரி னெழுகியகணை முழுகியவுட லுழுவை
வழைகுழைகழை விழைநிழலிடு மழைதவழ்மலை யதிரத்
தழைசெவிமழ வழுவைகள்விழத் தாக்கியதுறு விசையால்

வெய்யவர்குல முய்வகைவரு மெய்யருள்பெறு திண்ண
னையமிறுணை மொய்வலிகெழு மையவில்வல சில்லர்
மையொடுநிகர் மெய்யுருவிய வையுறுமுனை முள்ளை
யெய்யுதறின வொய்யெனவெதி ரெய்யடுகணை யென்ன 86

மேற்படி வேறு.

கனைமாமழை யிடிபோலதிர் கடுவாய்மரை யாமா
வினையாவலி யுடைமாகளி றெழுவாய்வனம் வாழ்மா
வனைவார்சழன் மதயானைகண் மலைவார்விடு வார்கோன்
முனைவாளிக ளுடன்மூழ்கலின் முளவாயின மாதோ 87

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

இவ்வகை பலவி லங்கி னீட்டமு நூழி லாட்டித்
தெவ்வடு வரிசி லைக்கைத் திண்ணன்மா வேட்ட முற்றிக்
கௌவைகொள் கான நீங்கிக் கடுந்திறன் மறவ ரோடு
மெவ்வமி றனதூர் புக்கா னீன்றவர்க் குவகை பொங்க.

பின்னரும் பலகால் வேட்டம் பெருவலிக் காளை யாடி
யன்னையு மத்த னுங்கண் டகமகிழ் பூப்ப வைகிக்
கொன்னுனைப் பகழிவேடர் குலத்தொடும வாழ்த்த
[வோர்நாட்
டன்னுளம் வேட்ட மூக்கச் சரம்புகா வனம்பு குந்தான்.

புகுந்தவன் கான மெங்கும் புக்குலாய் மிகவி ளைத்து
மிகுந்தழை மிடைம ரத்தின் மென்னிழ றனிது யின்றான்
முகுந்தனே வாளி யாக்கி முரணின ரரணம் வேவ
நகுந்தனி முதல்வ னன்னான் கனவிடை நண்ணி னானே.

பூசிய திருவெண் ணீறும் புலியத ளுடையுஞ் செக்கர்
கூசுபொன் சடையுங் கொண்ட கோலத்தோ டெதிர்நின்
[றொன்று
மேசுத லிலாத மைந்த விவ்வரை வடமூ லத்திற்
காசில்பொன் முகரி யாற்றங் கரையிலோ ரிலிங்க
[முண்டால். 91

அதுதுய ரனைத்தும் வீட்டி யரும்பெற லின்ப நல்கு
மதவலி யதைநீ சென்று வணங்குதி யென்று ரைத்துக்
கதுமென மறைந்தா னங்கே கண்விழித் திரும்பூ தெய்தி
யெதிரில்போ ராற்ற லான்றிக் கெங்கணு நோக்கிநின்றான்

ஆயகா லையில்வில் வேட ரார்ப்பினு லெழுந்து கான்சூழ்
போயவல் வலைப ரித்துப் பொருக்டுங் காலிற் பொங்கி
மாயிருங் கேழ லொன்று மலைபுகப் போதல் கண்டான்
காயழல் வெகுளி யான்பின் கையில்வில் லொடுதுரந்தான்.

துரந்துபின் செல்லச் செல்லத் துணைவிற்பொ யெறுழி
[யாற்கி
ழிருந்தரு ளிலிங்கத் தின்பா லெய்தலு மறைந்த தண்ணல்
வரம்பில்விம் மிதத்த னாகி மற்றிது மறைந்த தென்னோ
தெரிந்தில மென்று நின்றான் சிவலிங்க மிருத்தல் கண்டான்

காண்டலுங் கடவு ளார்தங் கருணைநோக் கினிது பெற்று
மாண்டகு மிரதந் தோய்ந்த வல்லிரும் புருவ மாறி
யீண்டொளி கெழுபொன் னுவ தென்னமுற் குணங்
[கண் மாறி
யாண்டகை யிறைவன் றன்பா லன்போரு வடிவ மானுன்

நாள்பல பிரிந்தி ருந்து நண்ணிய சிறுச தங்கைத்
தாளிள மகனைக் கண்ட தாயெனத் தாழா தோடி
நீளெழு வனைய தோள்கள் ஞெமுங்குறத் தழுவி மோந்து
வாளழ லரக்கி னன்ன மனத்தினுன் முத்தங்கொண்டான்

செய்யகண் ணீரரும்பச் செறிமயிர் பொடிப்ப வாதன்
கையகப் பட்ட தெய்வக் கதிர்விடு மணியி னுயேற்
கையன்வந் தகப்பட் டானென் றணிமெயி றிலங்க நக்கு
மெய்யெலா மெய்யன் பாய விடலைமற் றின்ன சொல்வான்

ஆனையும் புலியு மெண்கும் யாளியு முளவுங் கூர்ங்கோட்
டேனமுந் திரியுங் காட்டு ளெந்தைநீ துணையு மின்றிக்
கூனல்விற் றடக்கை வேடர் குலமென விருப்ப தென்னே
யூனுண வுனக்கி யாவ ருண்கெனத் தருவா ரந்தோ. 98

தேனொடு தினையின் பிண்டி தீம்பழங் காய்கி ழங்கு
மானொடு முயலெய் கேழல் வல்லுடும் பழுங்கி வற்றி
னூனுண வென்றிவ் வெல்லா முதவுவல் யானே நல்ல
கானவர் துணையுண் டெம்மூர்க் காண்டிவா வென்று
[நின்றுன் 99

சாமிநீ தனியே யீண்டுத் தங்குத றரித்த லாற்றே
னேமநல் லுடுப்பூர்க் கின்னே யென்னொடு வருதல்
[வேண்டும்
நீமன மிரங்கா யெந்தா யெனப்பல நிகழ்த்தி னனக்
கார்மழை யனையா னற்புக் கடலினுக் கெல்லை யுண்டோ.

மறுமொழி யிறைவ னென்றும் வழங்கல னிருப்ப மீளி
யிறைதிரு வுளத்தி னெண்ண மிவ்வயி னிருத்தல் போலுஞ்
சிறியனே னினியித் தெய்வ சிகாமணி தன்னி னீங்கி
லுறுவனோ வுயிரி னேடென் றுரைத்தன னின்று னுங்கே.

அண்ணறன் முடியிற் றாய்நீ ராட்டுபு முருகு விம்மு
தண்ணுறு மலர் மாலூரத் தளிர்சூட்டி யிருத்தல் காணூஉப்
பண்ணவன் றனக்கீ தேற்ற பணியெனத் தேறி யுள்ள
மண்ணெழு வனைய தோளான் மற்றது கடைப்பி டித்தான்

பின்புவேட் டுவர்தங் கோமான் பெரும்பக லாயிற்
[றன்னோ
வென்பெருந் துணையாய் நின்ற விறைவனு் மிகப்ப சித்தா
ரின்சுவை யூன்கொ ணர்ந்திங் கிடல்வேண்டு மென்ன
[நீங்கிற்
கொன்சின விலங்கி னீட்டங் குறுகிலென் செயுமோ
[கெட்டேன். 103

என்றுசா லவுமி ரங்கி யெரிபசி மிகாத முன்னஞ்
சென்றொரு கணத்தூன் கொண்டு திரும்புவ மெனத்து
[ணிந்து
குன்றிடை யெனக்கு வாய்த்த குலமணி விளக்கே யெந்தா
யுன்றழற் பசித ணிப்ப வுறுசுவை யிறைச்சி கொண்டே.

உழுந்துருள் பொழுதின் மீள்வே ளெருகண மேனுந்
[தாழேன்
வழங்குறு கொடுவி லங்கு வருமென வஞ்சே லைய
வெழுந்துமேல் வந்த தாயி லென்னையொய் யெனக்கூ
[வென்று
குழைந்தவிற் றடக்கை கூப்பிக் குறவர்கோ னரிதி னீங்கி.

கடிக்கடி மனையு ணின்ற கன்றகல் புனிற்றுப் போல
வடிக்கடி திரும்பி நின்றே யையர்தந் தனிமைக் கேங்கி
வடிக்கடி யம்பு பட்டு மழைமுகி லெனக்கி டக்குங்
கிடிக்கிடி வேட்டைக் கானங் கிளர்கடுங் காலிற்
[சென்றான். 106

கொழுந்தசை மோழ லொன்று குரவர்கோன் றானே
[யேந்தி
முழங்கலை யெறியு நன்னீர் முகரியின் றீரஞ் சார்ந்தோர்
செழுந்தரு நிழலின் வைத்துத் தீயர ணியினு லாக்கி
யெழுந்துறு மயிர்க டிந்தவ் வெறுழியை வாளி னீர்ந்தான்.

ஈர்ந்துசெந் தசையுட் சால வின்சுவை யுடைய வெல்லாந்
தேர்ந்துவே றெடுத் தெடுத்துத் தேக்கிலை யதனுட் பெய்து
கூர்ந்தவா யம்பிற் கோத்துக் கொந்தழற் பதத்திற்காய்ச்சி
யார்ந்தபே ரன்பன் வாய்ப்பெய் தருஞ்சுவை பார்க்க
[லுற்றான். 108

பல்லினுன் மெல்ல மெல்லப் பன்முறை யதுக்கிப் பார்த்து
நல்லன விறைச்சி யெல்லா நவையறேக் கிலையிற் றைத்த
கல்லையுள் வாங்கி வைத்துக் கழிசுவை யிலாத வெல்லாம்
வல்லைவெள் ளிடையு மிழ்ந்தான் வருபவக் கடலமிழ்ந்தான்

பூந்தளி ரோடு கொய்த் புதுமலர் தலையிற் பெய்து
தாந்திர விதியின் ருட்டுந் தண்புனல் வாய்மு கந்து
தீந்தசை யமுது பெய்த தேக்கிலைத் தளிகை யோர்கை
யேந்தியம் பொடுவில் லோர்கை யெடுத்துவல் விரைவிற்
போந்தான். 110

மேற்படி வேறு.

என்னு ருயிர்க்குத் துணையாவா ரெரிவெம் பசியா
[லிளைத்தாரோ
வன்னே கொடிய விலங்கினத்தா லச்சுற் ருரோ
[வெனப்பதைத்துத்
தன்னு தரவிற் பார்ப்ப ருந்தத் தாழா தோடும்பறவையென
முன்னு மனமும் பின்னுக முதல்வன் றன்பா லோடினான்.

சென்று குறுகி யெம்பெருமான் றீயேன் வரவு
[தாழ்த்தலினுற்
கன்று பசியால் வருந்தினையே யென்று கரைந்து
[திருமுடிமேற்
றன்று தளிருஞ் செழும்போதுந் தொடுதோ லடியான்
[மாற்றிவா
யொன்று நீராற் பிரானுடலோ டுள்ளங்குளிர வாட்டினான்.

ஆட்டித் தலையி லிருந்தகம ழலருந் தளிருமெடுத்திறைஞ்சிச்
சூட்டித் திருமுன் னிலைக்கலத்திற் றூய விறைச்சிப்
[போனகம்வைத்
தீட்டற் கரிய பெரும்பொருளே யெந்தா யுண்கென்
[றினியசொலி
யூட்டிப் பிரியா தருகுநின்று னுவகைக் கடற்குக் கரை
காணுன். 113

கலித்துறை.

கால மங்கதில் வேடர்தந் தலைவனைக் காணார்
சால வச்சுறீஇக் காடெலாந் தேடியத் தடங்கோட்
டால மூலத்தி னிருந்தரு ளண்ணறன் னருகு
நீல மால்வரை நின்றென நிற்பவற் கண்டார். 114

அருகு சென்றடைந் தையநீ யெங்களை யகன்றிப்
பெரிய மால்வரை யடைந்ததென் பிழைத்தனங் கொல்லோ
பருதி வானவ னண்பகல் கடந்தனன் பசித்தாய்
முருக விவ்வழி நிற்பதென் வருகென மொழிந்தார். 115

கரைந்த சொற்கெலா மெதிர்மொழி கொடாமையிற் [கவன்று
பெருந்த காயுனக் கெங்கண்மேன் முனிவென்கொல் [பேசாய்
வருந்தி நீயிவண் வந்தமை யறிந்திலம் வள்ளா
லிரங்கு வார்கழ லின்னடி யறியவென் றிசைத்தார். 116

மற்ற தற்குமொன் றுரைத்தில னிற்பவம் மறவர்
கொற்ற வில்லுடைக் குரிசினீ யுளத்திலென் கொண்டாய்
சற்று மெம்மிடத் தன்பிலை யாயினை தலைவ
குற்ற மெம்வயிற் கண்டதுண் டேற்பிற கூறாய். 117

என்று பற்பல திறத்தினு லுரைக்கவு மினையோ
னென்றும் வாய்திறந் தானலனோவியம் போலக்
குன்ற வில்லியை நோக்கிநின் றனவர் குறித்து
மன்ற வெஞ்சின மன்றிது வென்னென மருண்டார். 118

இங்கு நின்றவித் தெய்வத மிவனிடத் தேறித்
தங்கி நின்றதோ வென்கொலோ வறிகிலந் தமியே
மங்கு நம்மொடு வருகுவ னலனிவ னந்தோ
நங்க டொல்குலத் தலைவனா நாகற்கென் னுரைப்போம் 119

தத்தை யாகிய தத்தையந் தேமொழித் தையன்
மத்த யானைபோ லென்மக னெங்கெனின் மறுசொ
லெத்தி றத்தினாற் சொல்லுது மெனப்பல விரங்கி
யெய்த்து நின்றனர் வசிக்கவோ ருபாயமு மில்லார் 120

குழைக்கு நோன்சிலை நாகனோ டிச்செயல் கூறி
யழைத்து வந்தன மெனிலவ னெத்திறத் தானும்
பிழைக்கு மாறியற் றுவனெனத் துணிந்தனர் பெயர்ந்தார்
தழைத்த லைப்புலா னாறும்வாய்ச் செய்யகட் சவரர். 121

அன்ன காலையி லாயிரங் கதிர்ச்சுட ரரசன்
மன்னு திண்ணனன் பப்புறத் துலகெலாம் வழங்கப்
பன்னு வேமெனப் போதல்போற் குடதிசைப் பராரைச்
சென்னி வான்றொடு மலைமறைந் தானிருள் செறிய 122

அரவு மிழ்ந்தசெம் மணிக்கண மிமைத்தலி னலரி
யிரைதி ரைக்கடன் மூழ்கியுங் கங்குலங் கில்லை
யிருள்கெ டச்சுடர் விரிதரு விலைவரம் பில்லா
வுருவ மாமணி பலவுள விடத்திர வுண்டோ. 123

அண்ண லைக்கொடு விலங்கினங் குறுகுத லஞ்சி
வண்ணு திக்கணை தொடுத்தகூன் வில்லொடு மறந்துங்
கண்ணி மைத்தில னாகியே வைகறை காறு
மண்ணெ ழுப்புரை தோளனின் றுணிறை மருங்கு. 124

அன்ப ரன்பினுக் ககப்படு பேரரு ளாழிக்
கின்ப வூன்றிரு வமுதமாக் கியவுளத் தெண்ணி
வன்பெ ருஞ்சிலைத் தடக்கையான் வைகறைப் போது
பொன்ப ரந்தொளிர் மால்வரைச் சாரலிற் போந்தான்.

வீட்ட வாவுடை யார்க்கரு டருமொரு விமல
னூட்ட மாகிய தான்கொள்புண் ணுற்றிடு நம்பி
வேட்ட மாடுதல் காணிய விரும்பிவந் தென்னக்
கோட்ட வார்திரைக் கடலெழுந் தான்சுடர்க் கோமான்.

கலிவிருத்தம்.

பொங்கு வெஞ்சினப் புண்கமழ் வாளுகிர்ச்
சிங்க மன்னன் செயனிற்க மற்றினிக்
கங்கை வார்சடைக் கண்ணுத லுண்முத
றங்கு நெஞ்சத் தவன்செயல் சாற்றுவாம். 127

அருளு மானப் பொறையு மறிவொடு
தெருளு நோன்புஞ் சிவனிடத் தன்பினே
டிருளிற் றீரவா வின்மையுங் கல்வியு
மருளின் மெய்ம்மையு மாணுரு வாயினன். 128

வெறுப்பில் சந்தன மெய்யெலாம் பூசிநின்
றிறப்ப வின்ப மியற்றுநர் தங்கணுங்
கறுத்தெ ழுந்தெதிர் காயழற் பெய்துதன்
புறத்து வார்கணு மொத்த வுளத்தினன். 129

நீடுங் கார்க்குழ னீளரி வாள்விழி
வாடுஞ் சிற்றிடை மாதர்கள் புல்லினு
நாடுந் தன்னுளந் தாயென நண்ணுவா
ளேடும் பொன்னு மொருநிகர் நோக்குவான். 130

ஈச னார்தம் மிணையடித் தாமரைப்
பூசை செய்தொழி லாப்பூண்டு செய்திடு
மாசை மேல்கொண் டருமனத் தான்சிவ
கோச னென்னுங் குணப்பெருங் குன்றனான். 131

இரவி வந்தெழு முன்ன மெழுந்துபோய்
முரிதி ரைப்புனன் மூழ்கி விதிமுறை
விரைசெய் போதொடு மென்புன லுங்கொடு
புரிச டைப்பிராற் பூசிப்ப வெய்தினான். 132

தலைமி சைத்திரு மஞ்சனந் தாங்குபு
மலர்பெய் கூடையு மேந்துபு வல்வினை
விலகு மண்ண றன்னுமம் விளம்புபு
புலவ னையன் றிருமுன்பு போயினான் 133

தேன்கு லத்தொடு செவ்வழி வண்டுளர்
கான்க டுக்கையங் கண்ணியன் முன்பெலா
மூன்கி டத்தல்கண் டுள்ள நடுங்கியே
தான்கு தித்தய லோடினன் சூழ்விலான் 134

தரவு கொச்சகக்கலிப்பா.

மேவார்வந் தடிபணியும் விண்ணோர்கண் முடிமணிக
ளோவாது கிடந்தொளிரு முடையபிரான் றிருமுன்ன
ராவாவிக் கொடும்பாவ மார்செய்தா ரிதுசெய்யத்
தேவாதி தேவனார் திருவுள்ள மிசைந்தாரோ 135

கொல்லாமை யறியாமைக் குணமாகக் கொண்டொழுகும்
பொல்லாத சிலேவேடப் புலைஞரே யிதுசெய்வா
ரோல்லாத செயலிதையன் புடையோர்கள் கண்டக்கா
ணில்லாம லிறந்திடுவர் நிற்கின்றேன் கொடுவினையேன் 136

என்றுபல பலகூறி யிணையிலா னழுதிரங்கிக்
கன்றுமிடற் றிறைபூசா காலமிகத் தாழ்க்கநா
னின்றதனுற் பயனென்னே யெனநினைந்து புலவெல்லாந்
துன்றுமல காலகலத் துடைத்தாப்பி நீர்தெளித்தான். 137

பின்னரடைந் தலைபுரட்டும் பெருந்தீர்த்தம் படிந்தாடிச்
சொன்னமறை மந்திரத்தாற் றூய்தன்மை கடிந்ததற்பின்
மன்னுமுருத் திரசமக நமகத்தால் வானவர்கோன்
சென்னிமிசைப் புனலாட்டித் திருமலர்கொண்
[டருச்சித்தான். 138

முன்னர்நின் றுகைதலைமேன் முகிழ்த்திருகண் ணீர்பாயத்
துன்னியமெய்ம் மயிர்பொடிப்பச் சுடுதழல்வாய்ப்
[பட்டவரக்
கென்னமன நனியுருகி யிளகமிக நாத்தழும்ப
மன்னுமன ஞேடுசாம மறைக்கீதம் பாடினன். 139

பற்பலகால் வலஞ்செய்து பணிந்தரிது நீங்கிப்போய்ச்
சிற்பரனு ரடிமறவாச் சிந்தையன்றன் னிடத்தடைந்தான்
முற்பகல்வே டர்கணேற்ற முழுநோன்பா லவதரித்த
விற்படுகார் மழையன்ன விடலேசெயல் விளம்புவாம். 140

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

எழுவினங் கவற்று தோளா னேறுகாற் பன்றி செல்லும்
வழியறிந் தொளிநின் றெய்து மான்றுயி லிடன றிந்து
குழைநெடுஞ் சிலையிற் பூட்டு கோலுட லுருவ வெய்து
முழுவலன் புடையான் முன்போ லறுசுவை யமுத
[மைத்தான். 141

பின்புகோற் றேனி ரம்பப் பெய்துகொண் டிறைப சிக்கு
மென்பதாற் றன்றொ டுத்த வேவென விரைவி னோடி
முன்புபோற் பூசை முற்றி முனிவிலின் னமுத ருத்தி
யன்பினாற் கடலி னன்ன னருகுநீங் காது நின்றான். 142

அந்தவே லையில்வில் லோரா லரும்பெறற் புதல்வன் செய்தி
தந்தையுந் தாயுங் கேட்டுத் தணிப்பருங் கலுழ்ச்சி கொண்டு
வந்துபற் பலதிறத்தால் வசிப்பவும் வசமா காணுச்
சிந்தைநொந் தினியென் னென்று சென்றனர் மகனிற்
[றீர்ந்தே. 143

அன்னவ ரடைந்த வாறு மகன்றது மறியா தண்ண
றன்னொடு பிணித்த நெஞ்சிற் சவரர்கோன் பகற்போ
[தெல்லாங்
கொன்னவில் விலங்கி னீட்டங் கொன்றிறைக் கமுத
[ருத்தித்
துன்னிருட் காலந் துஞ்சான் றெண்டுசெய் தொழுகா
[நிற்ப 144

வழுவறு முனியும் வந்து வைகலுந் திருமு னான்கண்
டழுதழு திரங்கி யேங்கி யகற்றுபு புனிதஞ் செய்து
மழவிடை யவற்பூ சித்து மனந்துயர்க் கடலி னாழ்த்தி
யொழுகிட மற்ற வன்பா லுறுதுய ரொழித்தல் வேண்டி.

கங்குலைந் தாவ தன்கண் கனவிடைத் திருக்கா ளத்திச்
சங்கரன் வந்து சொல்லுந் தவத்துறை பயின்ற மேலோ
யிங்குநீ நம்முன் கண்ட திறைச்சியென் றினையல் வாழி
யங்கது நாம ருந்து மரும்பெற லமுதங் கண்டாய் 146

அதுநமக் கிடுவோன் செய்தி யறைகுது மம்ம தெய்வ
நதிபல படிந்து நோற்று நவையிரு னங்கள் செய்தும்
விதிபுறங் கண்டு பெற்ற மெல்லெழின் மகன்மேற் றுய்க்குப்
புதியவன் பேனைத்த னைத்தப் புண்ணியற் கேன்மே லன்பு

மற்றவன் செருப்புக் காலான் மணங்கமழ் நமது சென்னி
யுற்றுபூ மாற்றுங் காலத் துடம்பெலா மயிர்பொ டிப்பச்
சிற்றிள மகன்பூங் கையாற் றிருமுலை வருடப் பெற்ற
பெற்றதா யென்ன நெஞ்சம் பெரிதுரு குதுமா லன்ப 148

ஐந்தடர் முனிவ நம்மே லவனுமிழ் கின்ற தியாற்றுட்
டந்தநீ ராயி னன்றே தாழ்சடை முனிவ ராட்டு
நந்துமந் திரநன் னீரி னனியினி தெனலா முண்ணின்
றுந்திமே லெழுந்து போங்கி யோழுகிய பேரன் பாமால். 149

வள்ளுகி ருழுவை நோன்றாண் மாதவக் கிழவன் முன்னே
ரோள்ளிய வாழ்த்து நாம மோராயிர முறைத்துச் சாத்துங்
கள்ளவிழ் மலரி னன்னோன் கழுத்துற வளைந்து சூட்டு
மெள்ளுறு மயிர்கள் சூழ்ந்த வீர்ம்மல ரெமக்கு நல்ல 150

இந்திரன் முதலோர் செம்பொ னெரிமணிக் கலத்தி லேந்து
மந்தர வரையி னுழி மதித்தவா ரமுத மெல்லா
முந்துதன் வாய்ப்பெய் தாய்ந்த முழுச்சுவைச் சூட்டி
[றைச்சி
வெந்திற றந்த பின்னர் வேம்பொடு கடுவு மான. 151

ஏசுத லிலாவ றத்தோ யெமக்கவ னெம்மு னின்று
மாசில்பே ரன்பி னோடு வாய்திறந் துரைக்குஞ் சொற்போ
லாசக லறிவின் மிக்க வைம்புலப் பகைவர் பாடுங்
காசறு சாம வேத கானமு மினிய தன்றே. 152

அவன்மன நமக்குக் கோயி லவனுரை பலவு மோத்தா
மவன்முய றொழில்க ளெல்லா மறத்தொழி லைய மில்லை
யவனியல் காட்டு கின்று மன்பநீ நாளை யேவந்
தவனறி யாத வண்ண மயலொளித் திருத்தி யென்றான்.

இன்னணம் பலவுங் கூறி யினித்துய ரொழிதி யென்று
பொன்னிறம் பழுத்த கொன்றைப் புதுநறுங் கண்ணி
[வேய்ந்த
சென்னியந் தணன்ம றைந்தான் சிவகோச முனியெ
[ழுந்து
முன்னவன் கருணை யாற்சொன் மொழிநினைந் ததிச
[யித்தே 154

ஞாயிறு குணாது குன்ற நண்ணுதன் முன்ன மேபோய்ப்
பாயலை முகரி நன்னீர்ப் படிந்துநித் தியநிரப்பி
யாயிரம் பெயரி னான்ற னருச்சனை முடித்து மற்றத்
தூயநல் லிலிங்கத் தின்பின் றோன்றிடா தொளித்தி
[ருந்தான் 155

முனிவரு முன்னம் வேட்ட முன்னுபு சென்ற வென்றிக்
குனிசிலை மறவர்த் தாங்குங் கோமகன் வேட்ட மாடிப்
புனிதனுக் கமுதங் கொண்டு பொருக்கென மீண்டா
[னங்கட்
பனிதரு துன்பங் காட்டும் பற்பல நிமித்தங் கண்டான் 156

வழியிடை நிமித்த மென்ன மற்றியான் கண்ட வெல்லாம்
பழிபடு நிமித்த மென்னே பாவஞ்சோர் குருதி காட்டுங்
கழிசுவை யமுத முத்தங் கண்மணி யுயிரெ னக்கா
மழகனெம் பெருமா னென்னுற் றனன்கொலோ வறித
[றேற்றேன்

எனமனங் கலங்கி யொய்யென் றெறுழ்வலிக் காளை
[செல்லச்
சினவிடை வலனு யர்த்த செக்கரீர்ஞ் சடைநு தற்கட்
புனிதன்மற் றவனன் பெல்லாம் புண்ணிய முனிக்குக்
[காட்ட
நினைபுதன் வலக்கண் செப்புண் ணீருற நின்றான் கண்டான்

காண்டலும் வாய்நீர் சிந்தக் கையிலூன் சிதற வம்புங்
கோண்டரு சிலையும் வீழக் குஞ்சிப்பூ விறைய வாட்டு
நாண்டொட ரற்ற காலை நாடகப் பாவை போலத்
தூண்டரு தடந்தோட் காளை துண்ணென நிலத்து
[வீழ்ந்தான் 159

நெடும்பொழு துள்ளு யிர்ப்பு நின் றுயி ருலந்தா ரென்னக்
கிடந்துபின் கையா றெய்தக் கெடுநினை வடைந்தெழுந்தே
யொடுங்கலி றுயரா னெஞ்ச முண்ணப்பட் டுருமே றுண்ட
மடங்கலே றென்ன நம்பி வாய்விட்டான் கண்ணீர்வார.

முழுவலித் தடக்கை யாற்றன் முகமெலாங் குருதிபொங்கி
யொழுகிய வடித்துக் கோண்டா னுறுகண்ணீர் வெள்ளம்
[போர்த்த
வெழில்கனி மார்பு வீங்க வேற்றினன் றலைபி ளக்கக்
கழிதுயர்க் கடலி னாழ்ந்தான் கல்லொடு மோதினனல்.

ஓடுவன் மீள்வன் வீழ்வ னுருள்குவ னெழுந்து விம்ம
னீடுவ னந்தோ வென்ப னெட்டுயிர்ப் பெறிவ னெஞ்சம்
வாடுவன் பொங்கிப் பொங்கி வாய்விட்டு முகத்தைக் [கையான்
மூடுவ னெழுவன் கைகண் மோதுவன் கற்க ளோடே.

எவ்வமி லெந்தை யார்க்கிங் கிதுவந்த தெனக்கொன் [னூராம்
வெவ்வலி யழற்சீற் றத்து வேட்டுவ ராளோ வன்றி
யிவ்வரை விலங்கி னுனோ யாதென வறித றேற்றே
னவ்வுறு தெவ்வைக் காணி லாவிகூட் டுண்கி லேனே 163

மலையிடை யெனக்கு வாய்த்த மரகத மணியே செம்பொ
னிலகொளிக் குன்றே யெந்தா யெம்பிரா னின்கண் [புண்ணீர்
கலுழ்தரற் கென்னை கொல்லோ காரணந் திருவாய் சற்று
மலர்கிலை யென்கொ லென்று னுவிசோர்ந் தருகு சென்றான்

கையினிற் றுடைத்தான் பல்காற் காலுத றவிரா தாக
வையனைத் தழுவிக் கொண்டா னலறினு னெடும்போ [தெல்லாம்
பையென விடுத்துப் பின்பு பச்சிலை மருந்து தந்து
பெய்யினேய் தீரு மென்று பெயர்ந்தனன் மருந்து கொய்ய

கானெலாம் புகுந்து சென்று கண்டன வெல்லாங்கொய்து
கூனலாஞ் சிலைக்கை வேடர்க் கோமகன் றனைவிற் போந்து
வேனிலாற் காய்ந்த தேவின் விழியிடைப் பெய்தான் சோரி
தானிலா வண்ணங் கண்டான் றலையன்ப னுவி சோர்ந்தான்

யானினி யிதற்கென் செய்வே னெனவெண்ணி நிற்பவூனுக்
கூனிடல் வேண்டு மென்னு முரைகண்டு தன்கண் வாங்கி
வானவன் றடங்க ணிட்டான் மாறுமென் றுளம்வ லித்துக்
கானவர் பெருமான் றன்கண் கணையினா லிடந்திட்டானால்

இடந்ததன் கண்ணை யண்ண லிறைகண்ணி லப்பச் சோரி
மடந்தையோர் பங்க னாங்கே மாற்றினா னதனைக் கண்டா
னடங்கரு மகிழ்ச்சி யென்னு மாழ்கட லதனுட் டாழ்ந்து
முடங்குளை மடங்க லன்னான் முழவுத்தோள் கொட்டி
[யார்த்தான். 168

ஓடினான் றிசைக ளெல்லா முடம்பெலாங் குலுங்கநக்கான்
பாடினான் வாயில் வந்த படியெலாங் கைகள் கொட்டி
யாடினான் றுள்ளித் துள்ளி யாரவா ரித்தா னின்று
நாடினான் செய்த செய்கை நன்றுநன் றெனவி யந்தான்.

இன்னண முவகை வெள்ளத் திடையவ னுலாவும் வேலை
முன்னவன் பின்னு மன்னான் முதிர்ந்தபே ரன்பு காட்டச்
சென்னிறக் குருதி மற்றைத் திருவிழி யினுஞ்சோர் வித்தா
னன்னது மைந்த னார்வ வார்கலி குடித்த தன்றே. 170

எரிநிர யத்து னின்று மேறுபு துறக்கம் புக்கா
னொருவன்மற் றதனுட் பின்னும் வீழ்ந்தென வுவகை
[மாறிக்
கரையிலாத் துன்ப வெள்ளக் கடலினு ளழுந்தி யேங்கி
வரைபுரை தோளான் பின்னு மருந்துடை யையிற்றெ
[ளிந்தான். 171

இன்னுமோர் கண்ணெ னக்குண் டாதலி னதற்கஞ் [சேனென்
றன்னது களந்த காலை யையர்கண் ணறிதற் காகத்
தன்னொரு செருப்புக் காலைத் தம்பிரான் கண்ணி லூன்றிப்
பின்னடு கணைகண் வைத்தான் பிரானது பொறுக்க [லாற்றான். 172

மறைமொழி பிறந்த தம்வாய் மலர்திறந் தருட்பே ராழி
யிறைவன் கண் ணப்பநிற்க வெனமுக்கான் மொழிந்த [வன்கை
கறையணற் கங்க ணத்த கையினற் பிடித்துக் கொண்டா
னுறுநறைப் போலம்பூ மாரி யும்பர்மண் புதையப்பெய்தார்

குன்றவர் பெருமான் கையிற் கூர்ங்கணை விட்டெ றிந்து
கன்றிள மடமா னேந்துங் கண்ணுத லடிப்பூங் கஞ்சந்
தன்றலை மிசைபு னைந்தான் சைவவை திகனி றும்பூ
தோன்றிய வுளத்த னாகி யொருதனி முதல்வற் றாழ்ந்தான்.

மைதிகழ் மணிமி டற்று வார்சடை யெம்பி ரானக்
கைதவ மிலாரை மிக்க கருணையங் கண்ணா னோக்கி
மொய்தழ னடுவ ணின்று விரிவற மனமொ டுக்கிச்
செய்தவர் தமக்குங் கிட்டாத் திருவுருக் கலந்து [கொண்டான். 175

அற்றைநாண் முதலா வைய மண்ணல்கண் ணப்ப வென்று
சொற்றதே பெயராச் சொல்லுஞ் சுடர்மதிக் காந்தம் [வேடர்
சிற்றிடை நலார்மு கத்தைத் திங்களென் றெழுக்குந் [தெண்ணீ
ருற்றரு விகளாய்த் தாழு முயர்மலை காவ லற்கே. 176

கலித்துறை.

என்னத் திங்கள் வேணிம றைத்தவி றைவான்றேய்
சென்னிக் குன்றம் வாழ்நர்கள் கோமான் செயல்கூற
மன்னுட் களிகொண் டைய னடித்தா மரைசூடிப்
பன்னற் கினிய தோர்கதை யின்னும் பகர்கென்றான். 177

கலிவிருத்தம்.

தீதற வுரைத்தனஞ் சிலைவல் கண்ணப்பன்
காதைநக் கீரனார் கதைவி ளம்புதும்
யாதவ மனனமர்ந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான். 178

கண்ணப்பச்சருக்கம் முற்றிற்று.

எட்டாவது

நக்கீரச்சருக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அமுதுறழ் தமிழொண் முத்த மையசந் தனமெல் வாசங்
கமழ்குளிர் தென்ற லென்று கரையரும் பொருள்ப டாம
லிமிழ்கடல் வரைப்பெ லாந்தோன் றெண்பொருள் படுநா
[டெள்ளித்
தமிழ்முதல் பிறக்கு நாடாய்த் தயங்குமாற் பாண்டி நாடு.

மேற்படி வேறு.

தன்கால் சுமக்கு முறுப்பிலான்றன் னேவல ரானி லேகல
[ங்கிப்
பொன்கா றிதலே முலேமடவார்ப் பொருத்து துணையா மாநி
[லத்து
வன்கா றரியா துழல்வாரைத் தலேயாற் சுமக்கு மலேயைநகு
மின்கார் மழைதோய் முடிமலய விலங்க லுடைத்தத் திரு
நாடு 2

வானோ ரமுதஞ் சாபத்தான் மண்ணிற் புனலாயொழுகியது
தானோ நிலத்தி னியல்பாற்றன் றன்மை திரியா வரம்
[பெற்ற
மானீ ரோமற் றிதுவென்ன மதுரங் குடிகொண் டெஞ்
[ஞான்று
மானு தொழுகும் பொருனையாற் றரசு முடைத்தத் திரு
[நாடு 3

மேற்படி வேறு

தாமரை குவளே யாம்பல் சங்குசை வலமீ னன்ன
மாமைவண் டரம்பை கன்னல் கமுகமென் றவைநி றைந்து
காமரு மருத மாதர் கவினுறுப் பமைப்போ னவ்வத்
தோமின்மா திரிகை யெல்லாந் தொகுத்ததோ ரிடத்தை
[யொக்கும் 4

கலித்துறை.

அன்ன மந்நலா ரணிநடை கற்கவேட் டணையர்
பின்னு முன்றுமன் றடிசிவத் தும்பெரு மையினுன்
மன்னு மெய்விளர்த் ததுபெற வனத்தினுட் பதும
மென்னு மாதனத் திடையிருந் திருந்தவ மியற்றும் 5

கழனி யுட்புகுந் துறுவலிப் பகட்டினேர் கடாவி
யுழுந ரோதையால் வெரீஇயெழுந் தும்பரிற் பறக்கு
மழகு மென்சிறை யோதிமத் தணிசிறை யடித்த
லொழுகு வான்கங்கை வெண்டிரை யெறிந்திட லொக்கும்

சேல்க ளுண்டக டார்த்திய மென்சிறைச் செய்ய
கால வோதிமஞ் சிறுதிரை யசைக்குமென் கமலக்
கோல நாண்மலர்ச் சேக்கையிற் பெடைதழீஇக் கொண்டு
சாலும் வண்டிசை கேட்டுறங் குவமலர்த் தடங்கள் 7

மாம லர்க்கணை யோன்சிலை யாயுயிர் வருத்து
தீமை யின்பய னுறலென மள்ளராற் செய்ய
காமர் தீங்கரும் பாலையா டப்படு கவ்வை
தாம யற்கணேற் போர்கடா விடுமோலி தாழ்க்கும் 8

யாமு ழத்தியர் காற்கிணை யாமிழி பெய்தத்
தாமு லைத்தட மிடற்றொடு நிகர்த்துயர் தருக்குச்
சாமு ருக்குது மெனத்தெங்கின் காய்விழத் தாக்கிக்
காமர் நாகிளங் கமுகொடிப் பனவராற் கணங்கள் 9

வரைக ளொப்பன போரொழுக் கியபுரி வரையி
னருவி யொப்பன சுற்றுபா கடுபுகை யவைசூழ்
கருமு கிற்குல மொப்பன தீங்கழைக் கரும்பின்
றிரள வற்றினைச் சூழ்ந்தகா டொப்பன செறிந்து 10

நிரந்த மஞ்சள்கள் வாழையின் குலையொடு நெடிய
வரம்பை பாளைவாய் கமுகெழிற் குலையினை யடுக்கு
முரிஞ்சு மற்றவை தெங்கினெண் குலையையவ் வுயர்ந்த
குரும்பை நெட்டிலைத் தாழைதை வருமுகிற் குலத்தை 11

கருந்திண் கோட்டன குவிமுலைச் செய்யகட் காரா
னிருந்தண் பன்மல ரிலஞ்சியுண் மேய்த்திடு மிளைஞர்
பெருந்தண் மாம்பழ மெறிகரும் பின்குணில் பிறங்கு
சுரும்புண் டாமரைத் தடத்துவீழ்ந் தனக்குழாந் துரக்கும்

ஒழுகு தீம்புனற் கொழுங்கய லொடுவரால் கொடுத்துக்
கழியு நுண்ணிடைக் கொடிச்சியர் கொடிச்சியர் கையிற்
பழுதி லின்சுவைக் குறிஞ்சித்தேன் சுடர்கெழுபசும்பொற்
குழைக டந்தகட் கடைச்சியர் கடைச்சியர் கொள்வார்.

முருந்தெ யிற்றிய ரெயிற்றியர் கருங்குழன் முல்லை
யரும்ப விழ்ந்தபூ முடிப்பர்க ளணிமுலை யாகும்
பெருங்கு டத்தியர் குடத்தியர் பிறங்குகோங் கரும்பு
விரிந்த பூவினுட் பொற்றுகள் பூசுவர் மெய்யில் 14

கொம்ப ரொத்தசிற் றிடையுழத் தியர்கள்கட் கொண்டு
பம்ப ரத்திய லாடவர் மனம்படப் பரந்த
சம்ப ரத்திய முலைப்பரத் தியர்தளர் மருங்கு
லம்ப ரத்தியர் பரத்தியர் விலைமுத்த மளப்பார் 15

கொன்றை பூத்துழை தன்னிடங் கொண்டுகூர்ங் கோட்டு
வென்றி யேறுபெற் றண்டரைத் தாங்குபு வியா
தென்று மியாறுதன் றலைக்கொடு முக்கணெம் மிறைபோற்
றுன்று பல்பசுச் சேரிட மாய்முல்லை தோன்றும் 16

குழலி ஞோசையுந் தயிர்கடை யொலியுங்கொல் லேறு
தழுவு மார்ப்புமா னிரைமணி யரவமுந் தண்ணென்
செழும லர்க்கொன்றை படுசுரும் பிசையும்வெஞ் சினத்த
மழவி டைக்குலம் வாய்விடு முழக்கமு மாரு. 17

போர்வி டைக்குல முயர்ந்தெழு புற்றுமண் சிதறக்
கூர்ம ருப்பினாற் குத்துபு துகளெழக் குளம்பா
லார ழுற்சினத் தொடுநிலந் தொட்டிமி லசைய
மூரி வாய்விடு முழக்கம்விண் ணேற்றொடு முரணும் 18

கறங்கு பன்மணி யருவியைத் துளியொடு கலந்து
நிறங்கொண் மாமணி சேணிடைச் சிதறிட நெடுங்கைப்
பிறங்கு வெண்பிறைக் கோட்டியா னைகண்மதப் பெருநீ
ரிறங்கு மாமுகத் தேற்பன குறிஞ்சியி னிடங்கள் 19

குளிர்கொண் முத்தொடு முனைகயிற்செய் சிற்றிலிற் குழிசி
வளையு மிப்பியுங் கொண்டனத் துவிமேல் வயங்கு
மொளிகொள் செந்துகிர்ப் பாவையை யிருத்திமற் றுள்ளங்
களிகொள் பேதைய ராடுவ புன்னையங் கானல் 20

இன்ன தன்மைய வளங்கெழு பாண்டிநா டென்னு
மன்ன மன்னவ டிருமுக மண்டல மாகி
மன்னும் விண்ணவர் பொன்னக ரத்தினை மறுக்கும்
பொன்னி னன்மணி மாமதின் மதுரையம் புரமே. 21

தேடி நான்முகன் செங்கண்மால் காண்கிலான் றிங்கள்
சூடி னானடி யார்மனத் தான்மறைத் தொகுதி
பாடி னானரு ளாலறு பத்துநா லாட
லாடி னானதி லெனினதன் பெருமையா ரறைவார் 22

மொய்வம் பார்மலர் மிகநனி போர்த்திசை முழுதுஞ்
செய்வண் டார்த்திட வொழுகுறும்வையவிண் செல்லு
மைவந் தாடொளிர் மணிசெய்பொன் மாடமா மதுரைத்
தெய்வஞ் சாத்திய பன்மலர் மாலையிற் றிகழும். 23

நிலைபெ யர்ந்தயல் செல்கலாத் தாரகை நிரையி
னிலகி வம்பல ரிவையியங் காவகை யென்னென்
றலகில் விம்மித முறச்செயு மந்தரத் தகடு
தலையு ரிஞ்சுயர் கோபுரத் துறுசுடர்ச் சாலம் 24

அங்கண் மாடத்தின் மேற்பயின் மடந்தைய ரனம்வான்
கங்கை யங்கம லத்திரள் வளையவூண் கருதிப்
பொங்கு மாசையிற் புகவதி லன்னமிப் புட்க
டங்க டொல்குல மன்மையிற் றனித்தனி யிரியும் 25

மெலிநு சுப்பினர் களிமயின் மாடத்தின் மேற்றந்
நலிப கைப்பெரும் பாம்புகள் வைகலு நடுங்க
வுலவ லாலிரு சுடர்களு நனியுள முவந்து
மலிபொன் மாடத்திற் றமகதிர் வேறுரு வழங்கும் 26

விண்டொ டர்ந்தவே ரங்கடம் மேற்புறத் தாடும்
பண்ட ருங்குத லைப்பசுங் கிளிகடம் பணைத்தோட்
டொண்டை வாயினர் விழைதலிற் பிடித்திடத் தொடரும்
வண்டில் பூங்கண்ணி விஞ்சையர் சூழ்தர வயங்கும். 27

விண்ண கட்டினைத் தொடுமுடி யேறுதல் வேட்ட
வெண்ணி றப்புருப் பறந்தரு கேசெல விளங்கு
மண்ணு றுத்திய செம்மணி வேரமா மலரி
னெண்ணி றத்தனந் தேடழற் றுணவை யொக்கும். 28

நெடிய வெண்சுதை மாடத்தின் விரிந்தவெண் ணிலவுங்
கடவுள் வான்கங்கை வெள்ளமும் வேற்றுமை காணப்
படுக லாமையிற் கங்கைவேட் டெய்திய பருதி
வடிவ மென்சிறைப் புட்களோ டன்னங்கண் மருளும். 29

இருவி சும்புதோய் மாடமேற் சுருங்கையி லிருந்து
திருவி ளங்குமா நகரணி பார்த்திடுஞ் செய்ய
வரிநெ டுங்கணார் தோட்கிளி கொத்தலின் வளர்த்த
வுருவி ளங்கமு கின்குலை செழும்பழ முதிர்க்கும். 30

இனைய வாம்பெரு வளம்பல சிறந்தவவ் விணையி
லனக மாநகர் வெண்குடைச் செய்யகோ லரசன்
புனித வானவன் றலைக்கொளத் திங்களம் புத்தே
டனது தொல்குல விளக்கமோர் வழுதிபைந் தாரான். 31

கலிவிருத்தம்.

கடுக்குஞ்சர தநமாமுடி நாகத்திறை வாழ
வெடுக்குஞ்சர வணமைந்தனே டிணைவான்முகப் புகரா
முடுக்குஞ்சர மலையான்மலை யுறழ்தேர்பல வுடையான்
றேடுக்குஞ்சர மழையாற்பகை சுடுதீப்பல வவித்தான் 32

மேற்படி வேறு

வரையா கத்தான் வளர்தோ ளான்சேவ்
வரையா கத்தான் மதிபோல் குடையா
னரிமா னனையா ரணியேந் தல்பெரு
வரிமா னனையா ரலர்மா லையினன். 33

தரவு கோச்சகக்கலிப்பா

மாமாலை வண்டுபண்ணின் வகைபாடுந் துழாய்மாலை
மாமாலை வண்டுபண்ணி மதில்களொரு மூன்றுமெய்த
காமாரி யீகைப்பூங் கழன்மறவாக் கருத்தினனீங்
காமாரி யீகைப்பூங் கரதலத்தான் கடற்படையான் 34

கலித்துறை

ஆட லந்திரு வொடுநில மகள்விளை யாடு
நீடு செய்குன்ற மாந்தடந் தோளினா னிலவும்
பாட னங்கையா டரங்கமா நாவினன் பதும
வாடு நுண்ணிடை மடந்தையத் தாணியா மார்பன் 35

கலச யோனியா முனிவரன் குடித்தவக் கார்கோ
ளலைபெ ரும்புனன் மறித்தும்விட் டானென்ப ரதுபொய்
புலமை யந்தணர் பெறத்தரு பொருளொடப் பொன்மா
மலைய னுன்பொழி தானநீர் நிறைந்தன்று மன்னே 36

திரைநெ டுங்கடற் றுணையவ் வரசர்கோன் செந்நா
வரிநெ டுங்கணார் புலவியாற் பொய்ம்மையு மறியும்
பெரிய வந்தணர் மந்திர சேடையாற் பிறங்கு
மெரிம ணிப்பொலந் தொடிக்கைக ளேற்றலு மறியும் 37

உலவி லண்டமாம் புதுநறு வுற்றிருந் தொழுகு
மலரி னோன்வனை பொற்குட நிறைந்துமேல் வழியப்
புலவ ராமெகி னக்குழா நனிதவப் புரியு
நிலவு தன்பெரும் புகழெனும் பாலினா னிறைத்தான். 38

திரைய கன்கட லிடத்தனுந் துகிர்க்கொடி செண்டோய்
வரைக ளுக்கொளிர் செந்நிறத் தாதுமா திரத்தெண்
கரிக ளுக்கெழிற் சிந்துர மாகுமக் கழற்கா
லரசர் தம்பிரான் றனதடற் றோன்றொளி யன்றே 39

வெற்றி வேற்படை யவன்பிர தாபமாம் வெய்யோ
னூற்ற வார்திரைப் பெரும்புனற் குவலய முவப்ப
மற்ற வன்றரி யார்வசை யிருளொடு வயங்கும்
பற்று தீக்கதிர்ச் சுடரொடு மறுதலைப் பட்டு. 40

இத்த கைப்பெரும் பெயர்முடி வேந்தர்கோ னிலங்கு
நித்தி லத்தனிக் கவிகையா ணிலமெலா நிழற்றி
மெய்த்த செய்யகோ றடையற நடாய்த்திசை மேவு
மத்த வாரண முகங்களிற் கயற்பொறி வரைந்து. 41

குரும ணிக்குவால் பொற்குவை விலையில்பூண் குவவு
முரண்ம ணிப்பொலந் தேர்த்திரண் மனத்தினு முந்தும்
பரிய ணிக்குழாம் பிறைமருப் பீர்ங்கவுட் பரூஉத்தா
ளருவ ரைக்களிற் றினத்திறை யரசர்க ளளக்க. 42

வெளிறி னுண்புல மந்திரக் கிளையொடு மேவி
யளவில் போகந்துய்த் தினிதுவீற் றிருந்தன னன்று
னேளிதி ரைக்கட லுலகெலாந் தம்புகழ் நிறீஇய
தளர்வில் கேள்விநக் கீரனார் முதலிய சான்றோர் 43

அன்ப ரெண்ணிய வெண்ணியாங் கந்நிலை யளிக்கும்
பின்பு தாழ்சடைப் பெருந்தகை யருளினாற் பெற்ற
பொன்பி றங்கிய தெய்வதப் பலகைதம் புலமை
வன்ப றிந்திடந் தரவதி லிருந்துள மகிழ்ந்து 44

யாக்கை பெற்றவர்க் குறுதியா மறம்பொரு ளின்பம்
போக்கி னுண்பொரு ளறவரிற் புதுமொழி புணர்த்துத்
தூக்கி னம்பல பலபுனைந் தெறிதிரை சுருட்டு
மாக்க ருங்கட லுலகிடைத் தமிழினை வளர்த்தே 45

வெள்ளைத் தாமரைச் செல்விதன் பெண்மையை விடுத்திட்
டெள்ளற் பாடிலா னுருவெடுத் தெனமுடி யேந்தும்
பிள்ளைப் பான்மதி யான்றமி ழொருவனுப் பெருஞ்சீர்
வள்ளற் பாண்டியற் காருயிர்த் துணைவராய் வாழ்ந்தார் 46

இன்ன வாறவர் வாழுநா ளோர்பக லெரிகான்
மின்னு வாட்படைச் சேல்வல னுயர்த்ததார் வேந்தன்
பொன்னின் மாடத்தின் மேனிலைக் குழையடர் பூங்க
ணன்ன மன்னவ ளோடினி தேறின னமர்ந்தான் 47

ஆய காலையின் மந்தமா ருதத்தொடு மரிக்கண்
வேயை வென்றதோ ளணங்கின்வார் குழன்மணம் வீசச்
சேய னுன்குவி முகிழ்முலைச் செய்யவாய்த் தேவி
மாயி ருங்குழ லின்மண மாமென மதித்தான். 48

மதித்த காவல னதுமனங் கொண்டுதன் மனத்திற்
றதைத்த நுண்பொரு டரவொரு செய்யுள்செய் புலவ
ரிதைக்கொள் கென்றுபொன் னுயிர மொருகிழி யியற்றி
யதைப்பொற் சங்கமண் டபத்தின்முற் றூக்கின னன்றே

புலவர் யாவருந் தாங்கண்ட வாறுபாப் புனைந்து
தலைவன் முன்புபோய்ச் சாற்றிய வனைத்தையுந் தண்டார்
மலைகொ டோளினன் மறுத்தலின் வறிதகன் றனரவ்
விலகு பொற்கிழி யிருந்ததங் கறுப்பவ ரின்றி 50

கால மங்கதி லுரோணியிற் கரியவன் புகுத
வால வெவ்வர வடுத்தவீ ருவாவினு மழன்று
கோல வெஞ்சுடர் தண்சுட ரிரண்டும்வாய்க் கோள்ள
ஞால மைந்தனும் வெள்ளியு மிகல்பட நடந்தார் 51

காலை தண்பனி சொரிதலு நண்பகற் கால
நீல வான்புதை முகிலினம் பெய்வபோ னின்று
மாலை தோன்றுமுன் மலர்தலை வான்கமு வியது
போல நீங்கலு நிகழ்ந்தன மழைவளம் பொன்ற 52

பெயல்வ றந்தபைங் கூழெலாம் பீளொடு கரிந்த
பயம்வ றந்தன மரங்களு மலைகளும் பனிநீர்க்
கயம்வ றந்தன கள்ளியும் பெண்ணையுங் கதிரின்
வெயிலின் வெந்துதம் பசுமைபோ யுலர்ந்தன மிகவும் 53

உண்ப தின்பன நனிமிகக் குறைந்தன வொருங்கு
வெண்க லங்களும் வெள்ளியுஞ் செம்பொனும் விளங்கு
மண்கொ ளொன்பது வகையநன் மணிகளு மலிந்த
வெண்ப தம்பெற லரியதா யிற்றுமன் யார்க்கும் 54

நீடுந் தீப்பசி யாற்குடர் கொளுந்திய நிலத்தோ
ராடுந் தின்கலா வடகுதின் றனர்சில னகழ்ந்து
வாடும் பல்வகைக் கந்தமுந் தின்றனர் மக்கள்
காடுங் குன்றமு நிரம்பினர் தின்பன கருதி 55

சிறுவர் கையன தாயர்தாம் பறித்தனர் தின்றார்
முறுகு தீப்பசி பொறுக்கலார் மக்களுன் முதலா
வுறுப சுந்தசை யாவையுந் தின்றன ருலகத்
தறைப ழஞ்சொலைப் புதுக்கினர் மானமாண் பற்றார். 56

வழியெங் கும்பிண மிடறுமிவ் வார்கடற் கப்பாற்
பொழிலின் கண்ணுமுற் றுலாயது நாற்றநீள் போழ்வாய்
முழைவெங் கூற்றுயி ருண்டற வெறுத்தது முள்வாய்க்
கழுகுங் காக்கையு ஞமலியு நரிகளுங் களித்த. 57

சிலர்பி ழைத்தவவ் வற்கடத் திறையையர்ச் சிக்குந்
தலைமை பெற்றவன் றருமியென் பவனுட றளர்ந்திங்
கிலையு யிர்க்கர ணினிநடந் தெத்திசை யேனு
மலைவி லைத்துநா டெய்துவ மெனமனம் வலித்தான் 58

கோயில் சென்றடைந் தருட்பெருங் கடலினைக் குறுகித்
தாயி லன்புடை யாயிவ ணுறிலினிச் சாவேன்
றேய முய்வதற் கேற்றது புகுந்துநீச் செழுமை
யாய பின்பிவ ணடைகுவ லெனத்தொழு தழுதான் 59

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குழவியந் திங்கள் வேணிக் குரிசின்மற் றதனைக் கேளா
வழுதகங் குழையல் வாழி யன்பவொன் றறைவல் கேட்டி
வழுதிதுக் கினனோர் பாத்தன் மனங்கொள வுரைத்தோர்க்
[கென்று
கிழியதா யிரம்பொன் சங்கக் கிளர்மணி மண்ட பத்தே 60

அங்கதை யிப்பா வேந்தற் கறைந்தனை பெறுதி யென்று
கோங்குதேர் வாழ்க்கை யென்னும் கோதிறாக் கீந்து
[விட்டான்
பொங்கிய களிப்பி னூனும் போய்த்தொடர் பழுதந்தன்னைத்
திங்கள்வெண் குடையி னூன்றன் செவிப்புலத் தூற்றி
[னூல் 61

மற்றது கேட்டுத் திங்கண் மருகன்று னினைந்த வண்ணஞ்
சொற்றலி னினிது வந்து தொகுசங்கத் தவர்பாற் போயிப்
பொற்றபாட் டிசைவி யென்றான் பொருக்கெனத் தருமி
[சென்று
கற்றவ ரவைமுன் சொன்னான் கவிகள்கேட் டனுமு
[வந்தார் 62

ஆங்கவர் தம்முட் கீர னரும்பெறற் கல்விச் செல்வத்
தோங்கிய தருக்கி னாலின் னுரைத்தபாக் குற்ற மென்றான்
றாங்கிய வுவகை சிந்தித் தருமிதான் றனைவிற் போந்து
தேங்கமழ் கடுக்கை வேணிச் செல்வனோ டிதனைச்
[சொன்னான் 63

கேட்டன மங்க யற்கட் கிளியுறழ் கிளவி பங்கன்
பாட்டியற் புலவ னாகிப் பாவலர் தம்பாற் போயெங்
கோட்டமில் கவிக்குக் குற்றங் கூறின ரியாவ ரென்றா
னாட்டிய புகழ்நக் கீர னானெனத் தருக்கிச் சொன்னான் 64

சொல்லனுங் குற்றம் யாது சொல்லென நெடுங்க ணல்லார்
சில்லிருங் குழற்கு நாற்றஞ் செயற்கையன் றியற்கை
[யுண்டோ
வில்லது கூற லான்மற் றிதுகுற்ற மென்றா னண்ணன்
மல்லல்விண் மகளிர்கூந்தன் மணமியல் பன்றோவென்றான்

என்றலு மரம்பை யர்க்கு மிருங்குழ னறிய நாற்ற
மின்றெனு வுரைத்தா னைய னிறைவியென் றுலக மேத்துங்
குன்றிறை பயந்த செல்விக் கூந்தலேற் றென்றான் கீரன்
றன்றனித் தருக்கா லம்மை தனதுகூந் தலுமற் றென்றான்

எற்றினு னெற்றிக் கண்ணு மெரிமருள் சடையுங் காட்ட
மாற்றரு மருட்சி யான்கண் வடிவெலாங் காட்டினாலுஞ்
சாற்றிய செய்யுள் குற்றஞ் சடைகொண்டு வெருட்டல்
[வேண்டா
தோற்றில னிதனுக் கென்றான் றொலைவிலான் வெகுண்டு
[சொல்வான் 67

எம்மொடு முரணி வான்றே யிமயமால் வரைப்பூங்
[கொம்பின்
மைம்மலி மறைசொ லானு மணங்கமழ் குழல்ப ழித்த
செம்மைகொ ளறிவி லாய்நீ தீர்ப்பருங் குட்ட நோய்கொண்
டிம்மையி லலைக வென்று னிறப்பநக் கீர னஞ்சி 68

முழுமெய் யும்பனித் திரங்கி முருகலர் கமலம் வென்ற
கழலடி வீழ்ந்தி றைஞ்சிக் கருணையங் கடலே யெந்தா
யிழிபுடை நாயி னன்னே னிலங்கறி விலாது செய்த
பிழைபொ றுத் தருளிச் சாபப் பிணிகெட வருள்வா
[யென்றான் 69

என் றலுங் கருணை வள்ள லெரிசினந் தணிந்து கீர
சென் றுநீ கயிலை காணிற் றீருமிக் கொடுநோ யென் று
குன் றுறழ் புரிசை விண்டோய் கோயிலிற் புகுந்தொ
[ளித்தான்
றென் றலம் பொதிய வெற்பிற் றென்னர்கோ னதிச
[யித்தான் 70

பொற்குவை தருமி யேற்றுப் பொலிந்தினி திருந்தான்
[வெய்ய
வற்கடந் தீர வெங்கு மழைவளஞ் சுரந்த திப்பாற்
சிற்குணன் றந்த சாபத் தீப்பிணி யுடலம் போர்ப்ப
நற்கவி னிகந்து கீர நாவலன் சிந்தை செய்வான் 71

விரனிரை யழுகி நைந்து வீழ்ந்துகால் குறையா முன்ன
மிருகையும் விரல்கு றைந்திட் டேரிபுகு துடுப்போவ் வாமு
னுருவினுண் புழுக்கள் சோர வோழுகுசீ நாறச் சேணில்
வருதல்கண் டவரு மிழ்ந்து வழிவில கினர்செல் லாமுன் 72

பலப்பல நாடி றந்து படரொளிக் கயிலை யென்னு
முலப்பில்குன் றெய்தி யிங்கோ யொழிக்குவ மெனத்து
[ணிந்தான்
விலக்கரு நண்பி னோரை விட்டக றற்கு நெஞ்சங்
கலக்கமுற் றழுதி ரங்கிக் கரையில்பே ரஞரு ளாழ்ந்தான்

தடையில்பே ரறிஞர் தம்மைத் தனித்தனி விளித்து நும்மோ
டுடனுறை வாழ்வு நீங்கு மொருபெரும் பாவி யேனை
மடனறு நமரங் காணீர் மறவன்மி னென்று தன்மெய்ப்
படுபிணி நோக்கி மார்பம் படத்தழு வாது நின்றான் 74

நாவல ரதைய றிந்து நண்ணிமார் பிறுகப் புல்லி
யோவில்கண் ணருவி பாய வுளங்குழைந் தழுது நல்லோய்
மேவரு நின்னை நீத்து வெறுவிய மிருப்ப நின்ற
வாவவல் வினையு ளார்யா மல்லதிவ் வுலகத் தியாரே 75

என்றன ரிரங்க மேலோ னெதிர்தழீஇத் தழுவி யாறிக்
குன்றனீர் சிறியற் காகக் குழைந்தழ றமியேன் செல்வல்
பொன்றலி னட்பினுக்குப் புணர்வொடு பழகல் வேண்டா
நின்றநல் லுணர்ச்சி தானே நிறைக்குமென் றுணர்ந்த நல்லீர்

என்றுப திறத்தாற் கூறி யிணையிலா னரிதி னீங்கிச்
சென்றனன் புலவர் கண்ணுஞ் சிந்தையுந் தொடர்ந்து
[செல்லத்
தன்றிரைக் கையான் மோதித் தான்றியங் குலையு திர்க்கு
மன்றலம் புதுநீர் வையை வடகரை கடந்து மன்னோ 77

என்றினி மதுரை காண்பே மேப்பகல் சவுந்த ரேசன்
றன்றிரு வடிகள் காண்பேந் தாயையேஞ் ஞான்று
[காண்பேம்
வென்றிவேற் றரும வேந்தர் வேந்தனை யெந்நாட் காண்பே
மோன்றுயிர்த் துணையாஞ் சங்கத் துறவையெப் பொழுது
[காண்பேம் 78

நுணங்குமா ணறிவின் மிக்க நூல்வலார் மறப்பர்
[கொல்லோ
வணங்குதேர்த் தானை மன்னர் மணிமுடி யுழுக முற்கா
லணங்குடை யரிமான் றுப்பி னரசர்கோ னினையான்
[கொல்லோ
விணங்குநூற் புலவர் நாற்பா னெழுவரென் றுரைக்குங்
[கொல்லோ 79

இனித்தமி ழினிமை யாவர்க் கெடுத்திசைத் திடுவ மன்னே
வெனப்பல பலவு மெண்ணி யினைந்துவெஞ் சுரமி றந்து
புனற்றிரு நாடு புக்குப் பொருந்திரைப் பெண்ணை நாடு
தனைக்கடந் தந்தண் பாலித் தண்ணடை கண்டு சென்றான்

அரவணைச் செல்வன் வாழு மந்தமிழ் நிலத்தி னெல்லைத்
திருமலை கண்டு கண்டோர் செறிவினைத் தொடா றுக்கும்
பெருவரை கண்டி றைஞ்சிப் பிறங்குவெள் ளருவி தாழும்
பொருவரு மேம கூடப் பொருப்பினை யினிது கண்டான்

அருணெடுங் கடலா நந்தி யடிகள்வந் தவத ரித்து
முரணுறு சமண்கு றும்பு முருக்குபு சைவ மென்னுந்
திருநில முழுது மாண்டு செல்வமோ டினிதி ருந்த
பொருவில்கல் யாண மென்னும் பொன்மதி னகரங்
[கண்டான் 82

உரைபெயர் பலதே யங்க ளொருபொழு திருந்தவ் வூர்பின்
னொருபொழு திராமற் சென்றே யொளிவளை மணிகொ
[ழிக்கு
மிரைதிரைக் கங்கையாடி யிறந்தவர் பிறவா வின்பந்
தருதிரு நகரி றைஞ்சித் தடவரை நாடு புக்கான் 83

கண்ணுதற் றிருக்கே தாரங் கண்டுதண் பனிபு தைத்த
விண்ணக டணவு கோட்டு வியனெடுங் குன்றத் தாறவ்
வண்ணற னருளா னுப்பே ராற்றலாற் சென்று னன்றேற்
பண்ணவர் தமக்குஞ் சேறற் பாலதோ பனிமாக் குன்றம் 84

மடங்கலெண் குழுவை பன்றி வாரண முளவுள் ளிட்ட
கொடுஞ்சின மாவழங்கு குன்றமுஞ் செறிமுட் காடு
முடம்புறு பிணிவ ருத்த வுள்ளங்கால் வெள்ளென் பாகக்
கடந்துசெல் வழிக்கண் டானுற் கடல்புரை தடமொன்
[றம்மா 85
சிறந்தவாங் கலைவி ளங்கித் தெளிநறு வொழுகச்
[செவ்வாய்ச்
சிறந்தசெந் தாம ரைத்தண் டேமலர் மாலை தாங்கிப்
பிறந்தநாட் டொடங்கி யானுப் பிறங்குநன் னீர்புணர்ந்திட்
டறந்தவா மறைவ லாள ரனையதத் தடந்தான் மன்னோ 86

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாண்டவா ரணத்தோ டரசிய லோதி மந்திரி வளம்பெரி
[தமைந்தே
யீண்டிமே லெழுந்து வந்தமே வலர்தம் மினநிலை தளர்ந்திட
[வலைத்துக்
காண்டக விளங்கி யுயிர்த்தொகை புரந்து களியளி
[யுளர்நறுந் தண்டார்த்
தூண்டரு தடந்தோட் புலவுவேற் றடக்கைச் சுடர்முடி
[வேந்தர்போற் றேன்றும். 87

வளரிள வளைய வெள்ளியும் பொகுட்டு மாசறுசெம்பொனுந்
[தும்பி
யுளர்கமழ் பதுமப் பதுமரா கமுந்தே னுறுநறு நீலநீ
[லமும்பச்
சிளவடை யொளிசெய் மரகத மணியு மெகினிழற்
[காற்கொழுந் துகிரு
மொளிகிளர் வளைவெண் டாமரை மணியு முடைமையின்
[வணிகரே யொக்கும். 88

கலிவிருத்தம்.

பூமி மங்கையைப் பொற்புறுத் திப்பல
வேம வன்னந் தருமோர் வளம்பெருக்
காமர் பூவிளை வித்தலி னக்கயந்
தோமில் பின்னவர் போன்மெனத் தோன்றுமே 89

வெளிய செய்ய கரியவொள் வீபொகுட்
டிளைய பாசடை யென்றிவை துன்னிய
தெளிபு னற்றடஞ் செய்யவ டானம
ரொளிகொள் சித்திரக் கம்பல மொக்குமே. 90

சால வூடிய தன்பெடை மீன்கொளற்
கானு மொண்சிரல் வீழொலி யச்சுற
மானு மன்னமவ் வச்சமே வாயிலாக்
கோல மென்சிற காற்றழீஇக் கொள்ளுமே. 91

மைத்த வண்டிசை வண்சிறைப் புள்ளிசை
தத்து பல்தவ ளைக்குரல் சங்கொலி
முத்த வெண்மருப் பியானைநீர் மொள்கலி
யித்தி றத்தினுர்ப் பென்றுமு டைத்தரோ. 92

பொருவி லாவகன் பூந்தடத் தின்கரை
மரக தக்குவ டொப்பது வான்றிசை
விரிவ ளக்கும் வியன்சினைத் தூன்றும்வீழ்த்
திரள தோராற் றிருமானி கர்க்குமால் 93

காற்ற ழங்கு கழற்கம லத்தினற்
சாற்று மோரேழ் தலமு மளந்தவவ்
வாற்றன் மாய னறிதுயில் கொள்ளுதற்
கேற்ற பைந்தளி ரீட்டமு டைத்தரோ 94

திசையி னின்ற தெறுசின வாரண
மசைத டக்கையி னூன்முரித் தாரழற்
பசிகெ டத்தினும் பாசிலை மென்சினை
யொசிவி னீள்பணைக் கோடி யுடையதால். 95

தூங்கு வீழ்நுனித் தொத்தி வருமுலை
வாங்கு நுண்ணிடைச் சூரர மாதர்தாந்
தாங்கு பூசலி னூழித் தடமுடி
யோங்கு வெற்பி லுதைந்துதைந் தாடுவார் 96

வேட்டு மெய்குளிர் மென்னிழ னின்றமாத்
தாட்ட டக்கைத் தழைசெவி யானைமேற்
கோட்டி னம்பொற் குடம்புரை செங்கனி
கூட்டு ணும்புட் குலங்க ளுதிர்க்குமே 97

நீரில் வீழ்ந்தன நீர்பயின் மீன்களாய்
பாரில் வீழ்ந்த பறவைக ளாங்கதிர்த்
தேரின் மேற்செல் சினைப்பல் தலையரா
வூரில் வேரூன் றுயராலி லையெலாம் 98

அனைய வாற்கீ ழருந்தமிழ் நாவலன்
மனன மர்ந்து வதிந்தன னங்கொரு
சினையி னீங்கிலை பாதி திரைப்புன
னனைய வீழ்ந்தது நன்புனற் றீரமே. 99

மேற்படி வேறு.

வீழ்ந்தது பறவையு மீனு மாகியங்
காழ்ந்திடு புனலினு மகன்க ரைக்கணுஞ்
சூழ்ந்திடு முலகினுந் துறவின் பாலினுந்
தாழ்ந்திடு மனமெனத் தம்மி லீர்த்தவே 100

அனையதோர் புதுமைகண் டதிச யத்தனுய்த்
தனியொரு தானவண் டரித்து வைகினு
னினைவறு குறுமுனி யிலக்க ணம்பெறப்
புனைதரு மிலக்கியப் புலவர் சிங்கமே 101

பருதியந் தகன்றனைப் பயந்த பின்னர்வல்
லிருணுகர்ந் தனையவ னிளவ லாமெனக்
கருவிருந் தீன்றன காட்சித் தாகிய
வொருபெரும் பூதமங் குடன்று வந்ததே. 102

வாரியை வயிற்றுறும் வடவை யோடொரு
பாரிய வுருவுசெய் தென்னப் பார்மிசைக்
காரினை யிடியொடு கவர்ந்து பங்கய
னேருரு வமைத்தென வுருவ மிக்கதே 103

இருளறி யாதவல் லிரவி யும்பெறு
தெருளறி யாதவா ணவமுந் தீர்தலின்
மருளறி யாததோர் சிவமு மானவே
யருளறி யாதத னகமெஞ் ஞான்றுமே 104

அடுதிற லுடையவப் பூத மாயிடை
வடகிழ லமர்தரும் வள்ளற் கீரனை
நடைதள ருழையிளங் கன்று நச்சியோர்
கொடுவரி கவர்ந்தெனக் கொண்டு சென்றதே 105

ஆங்கொரு மலைமுழை யவிர்ச டைப்பிரான்
பூங்கழ லடிநிழல் பொருந்தி னோர்தமை
நீங்கிய வாணவ சத்தி நித்தமா
வீங்குறு மெனநனி யிருளொ டொன்றுமால் 106

பகலிடை மெலிதனும் பரந்த வல்லிடை
மிகுதலு மிலையிருள் வெற்பி னம்முழை
மகிழ்வுசெய் வாழ்வினும் வறுமை யின்கணுந்
தகுதியா மனமொரு தன்மைத் தாதல்போல் 107

உண்ணிறை யிருண்முழை யொன்றில் பத்துநூ
றெண்ணுறு தொகையரா யிருந்து ளோருட
னண்ணலை யுள்புக வடைத்துப் பூதநீர்க்
கண்ணிய வுளமொடு கயத்திற் போயிற்றே 108

போயின காலையிற் புலவ னோடவண்
மேயின ரினைவுறீஇ விளம்பன் மேயினர்
நீயிவண் வருதலாற் குறைநி ரம்பியே
யாயிர மெனுங்கணி தத்த ராயினோம் 109

இனியுயிர் செகுத்துநம் யாக்கை யால்வயிற்
றனலினை யவிக்குமாங் கதுவென் றுள்ளுடை
நினைவொடு முரைத்தனர் நிரம்பு தங்கணல்
வினைவழி புலவன்வந் தமைவி ளங்கிலார் 110

கீரனங் கவர்மொழி கேட்டு மாழ்கில
ஞாரஞு ரெய்தலு மார்வ மெய்தலு
மோருட லியற்கையென் றுள்ளி யாங்குளார்
பேரிட ரகற்றுபோர் பெற்றி யெண்ணினுன் 111

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வரைபுணர் குறிஞ்சி மன்னன் வரைபக வெறிந்த [செவ்வேன்
முருகல ரலங்கற் றிண்டோண் முருகனேன் றவன்போற் [றண்டைத்
திருவடி மலரி றைஞ்சிற் றீவினைச் செல்லன் முற்றும்
பருதியங் கடவுட் கண்ட பனியென வகன்று போமால் 112

ஆறிரு தடந்தோ ளண்ண லாறெழுத் தினையு மோதில்
வேறோரு பிணிபோ மேன்கை வியப்பதோ பிறவி யென்னு
மாறரு மனுதி நோயு மாறிவே தாக மங்கள்
கூறரு மின்ப வீட்டிற் குடிபுகுந் திருப்ப ரன்றே 113

ஐம்பெரும் பூத வாயி னகப்படு முயிரை மீட்டுச்
செம்பொனஞ் சிறுச தங்கைத் திருவடி நிழலில் வைக்கு
நம்பிநங் குமர வேட்கிந் நாளொரு சிறுபூ தத்தா
லிம்பரிங் குறுநோய் தீர்த்த லெளிதலா லரிய தன்றே 114

இன்னன நினைந்து கீர னிலங்கிலை நெடுவேற் செம்மல்
பன்னிரு செவியு மாரப் பருகமு தாகி யோதி
லுன்னிய வுன்னி யாங்கிங் குதவுவ தாகிப் பாவுண்
முன்னுற வந்து நிற்கு முருகாற் றுப் படைமொழிந்தான் 115

பொன்னவிர் சுணங்கு பூத்த புணர்முலைக் கருங்கண் வள்ளி
கன்னலு மமுதுந் தேனுங் கைக்குமின் றீஞ்சொன்
[மாற்றித்
தன்னிகர் புலவன் கூறுந் தமிழ்செவி தாழ்த்துக் கேளா
வந்நிலை மனங்க ளிப்புற் றறுமுகம் படைத்த கோமான் 116

துயின்மலி திருமால் வீழ்ந்து துணுக்கென வெழுந்து நிற்ப
வெயின்மணி யணிமு டக்கு மெய்ந்நிமிர்ந் தோட வாடு
மயின்மிசை மலையிற் றேன்றும் வளரிளம் பருதிப் புத்தே
ளியன்மலி யுருவந் தோன்ற விவர்ந்தறு முகமி லங்க 117

பன்னிரு கதிருந் தோன்றும் பன்னிரு மலைகள் போலு
மின்னவிர் குழைக டாழ்ந்து விளங்குறு குவவுத்
[திண்டோள்
பொன்னரி மாலை தாழப் பொலங்கழல் புனைந்து வந்தேன்
சென்னியின் மலர்ந்த கஞ்சந் திகழ்தர வந்து தோன்றி 118

பூதநா தனுக்கங் காமப் புலவனைப் பூத முண்ணுங்
காதலா னணுகும் போதோர் கதையினு லலகி லண்ட
மோதினு னெனவே மோதி முடிதகர்த் ததனை வீட்டி
மேதையாம் புலவ னேடும் விடுத்தனன் முழையு ளோரை

பாரிடம் விழுங்கப் பட்ட பலரையும் வாய்தி றந்திங்
கோரிடம் விடுப்ப வந்த தொத்தவ ணிருந்தோ ரெல்லாம்
போரிட மலைவேல் போற்றும் புலவனை யடுத்த வாற்றாற்
காரிட மெனும்ப ராரைக் கன்முழை நின்றும் போந்தார்

பெரியவர் சங்க மெய்தப் பெற்றிடி னன்மை யென்ன
வுரைசெயப் பட்ட வற்று ளொன்றுமெய் தாத தில்லை
புரைதரும் வினைக டம்முட் போயுகா வினையு மின்றே
வரையுறழ் குவவுத் திண்டோண் மழைமத யானை வேந்தே

மணிமுடி யரசர் வாழ்வு மக்கட்பே ருதி நல்கிப்
பிணிமிடி பகையி டுக்கண் பேயினுக் கனவு கள்வர்
பணிவிட மோழிக்கு மாற்றுப் படைமொழி புலவர் சிங்க
மணிகிள ரலங்கற் றிண்டோ ளறுமுகற் றெழுது
[சொல்வான் 122

அடியனேன் செருக்கா லைய வாலவா யமல னென்றன்
வடிவெலாங் கவரு மிந்நோய் வரப்புகன் றனன்யா
[னஞ்சிக்
கொடியனேன் பிழைபொ றுத்தாட் கோடியென்
[றனனீண் டின்றுங்
கடிவிலாக் கயிலை காணி யென்றனன் கருணை வள்ளல் 123

ஆதலாற் கயிலை காண்பா னடைந்திவ ணிருந்த காலைப்
பூதமா ரஞரி ழைப்பப் போற்றினர்க் குதவி செய்யும்
வேதநா யகநீ யென்பால் விழுமமிங் கனைத்துந் தீர்த்தாய்
சோதிமா கயிலை காட்டித் தொலைத்தருள் பிணியு மென்றான்

செந்தமி ழாளி யின்ன செப்பலுங் கருணை கூர்ந்து
கந்தவே டிசைபு ணர்த்துக் கயிலையென் றால வாயி
லெந்தைகூ றுமை யானின் றிலங்குதென் கயிலை யானு
முந்துநோய் திரு மென்னு முன்னின னிதனைச் செய்தான்

கரைபொரு திரைநீர்ப் பொய்கை காட்டியோன்
[றிதன்கண் மூழ்கில்
விரைபடு கொன்றை வேணி வெற்பினைக் காண்பை
[யென்றான்
வரைபக வெறிந்த வைவேன் மணிமருள் கலாப மஞ்ஞைக்
குரைகழ லறுமுகத்தேங் குடிமுழு தாளுங் கோமான் 126

தன்றலை யான டந்த தாய்க்கலாற் கயிலைக் குன்ற
மின்றிரு தாளா லெய்த றனக்கெளி தோநல் யானைக்
கன்றொடு பிறந்த சிங்கங் கருணையாற் பணித்த வாறு
நன்றென வுளங்கொண் டங்க ணல்லிசைப் புலவ
[னென்பான் 127

முருகனைத் தொழுது சென்று மூழ்கினா னத்த டத்தி
லிருவினைக் குறும்பு கொல்லு மிலங்குதென் கயிலை
[தோன்றப்
பொருதிரைக் கங்கை நாணும் பொன்முக ரியினெ
[ழுந்தான்
சுரர்கள்மொய்த் தலர்பூ மாரி சொரிந்தனர் விசும்பு
[போர்ப்ப 128

அருந்தமிழ்ப் புலவன் பொன்னை யாற்றிலிட் டொருகு
[ளத்திற்
பொருந்துவித் தவன்ப யந்த புதல்வனோர் புலவன்
றன்னைத்
திருந்துறக் குளத்தின் மூழ்கச் செய்தொரு நதியின் வந்து
விரைந்தெழப் புரிந்த தன்மை வியந்திடப் பட்ட தன்றே 129

தாழ்ந்தபொன் முகரி தன்னைச் சார்தலாற் றணந்த
[தென்ன
வாழ்ந்ததென் கயிலை தன்னைக் காண்கையான் மாய்ந்த
[தென்னச்
சூழ்ந்ததன் மேனி மாநோய் தொலைந்தெழுந் தனன்மேல்
[வேலை
வீழ்ந்தவெங் கதிர் குணது வேலையு டெழுந்த தென்ன 130

மாசுறு மணியை மாசு தீர்தர மண்ணி யாங்குத்
தேசுறு முருக ஞகித் திருந்துபொன் முகரி மூழ்கி
யாசறு கவிதொ டுத்த வரும்பொரு ளெதிர்ந்தான்
[போற்கண்
கூசுறு மொளிகொண் மேனிக் குமரன்று தையையெ
திர்ந்தான் 131

மேற்படிவேறு

நெஞ்சக் குளமன் பெனும்புனலா னிறைந்து கடைவிட்
[டெனவிழிநீர்
விஞ்சக் கரங்க டலைகூப்பி விளங்கு திருக்கா ளத்திமலை
நஞ்சக் கரிய மிடற்றமுதை ஞானக் கொழுந்தைத்
[தொழுதிறைஞ்சி
யஞ்சக் கரமு மனத்தெண்ணி யமையா வன்பு மயமாகி

கயிலை வேறு காளத்தி வேறென் றெண்ணுங் கருத்திலை
[ஞய்க்
கயிலை பாதி காளத்தி பாதி யாகக் கலந்து றழ்ந்து
மயலில் கரும்பா மொழிபாகன் மகிழ வேண்பா வந்தாதி
மயிலில் வருவோன் பேரருளால் வந்த புலவன் பாடினன்

பாடும் புலவன் றனக்கொருதான் பரிசு கொடுப்பத்
[திருவுளங்கொண்
டாடும் பெருமா னெதிர்நின்றே யறைதி வேண்டிற்
[றெனவுடம்பு
கூடும் பிணியிங் கொழித்தவருட் குன்றே யென்றும்
[பேரறிவை
மூடும் பிணியுங் களைந்துனது மூவரித் தாட்கீ
[ழிருத்தென்றான். 134

அந்த மாதி யிலாக்கயிலை யமர்ந்த பெருமா னந்தாதிச்
சந்த மாலைப் புலவனது சத்தி பாதத் துயர்ச்சியாற்
பந்த பாசமற மாற்றிப் பன்றி யுருவாய்க் காண்பதற்கு
வந்த மாலு மறியாத மலர்த்தா ணிழலி லிருத்தினான். 135

என்று திருக்கா ளத்திமலை யெழுந்த ஞானச் செழுஞ்
[சுடரிற்
சென்று புகுந்த கீரனார் செய்தி யனைத்துங் கையிளமான்
கன்று கரந்த பரன்கூறக் கழற்கால் வேந்தன் கதையின்னு
மொன்று கருணைப் பெருங்கடலே யுரையா யடியேற்
[கெனத்தாழ்ந்தான். 136

கலிவிருத்தம்.

தீதறு கவிவரன் செயலு ரைத்தனங்
கோதையர் கபிலைசேர் கொள்கை கூறுதும்
யாதவ மனனமர்ந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான். 137

நக்கீரச்சருக்கம் முற்றிற்று

ஸ்ரீ சிவஞானபாலைய தேசிகர் திருவடிவாழ்க.

உ

சிவசண்முகன்றுணை

சீகாளத்திப்புராணம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

ஏழாவது

கண்ணப்பச்சருக்கத்தின்

குறிப்புரை

செய்யுள் (4) இறவுளர் - குறிஞ்சி நிலமாக்கள்.

(6) இதண் - பரண். மாடகம் - வீணைமுறுக்காணி.

(8) வீழி - விழுதிப்பழம். ஏழைமையென்பது - ஈண்டு மெலிவையுணர்த்தி நின்றது.

(14) அயர்தல் - செய்தல். வேலன் - வெறியாட்டாளன். வெறியயர்வித்தல் - சன்னதங்கொள்வித்தல்.

(18) முகுளம் - அரும்பு. (20) வயா - கருப்பநோய்.

(23) மண்ணுறுத்தல் - கழுவல். (30) கோமளம்-இளமை. குடாவடி - கரடி. (38) பறை - இறகு. (41) வளையம் - தாமரையுட்சுருள். (50) மீளி - திண்ணியன். (51) வீ - பூ.

(56) குக்கில் - குங்கிலியம். விடைபடுத்தல் - ஆட்டைப் பலியிடுதல். (57) தொப்பி - கள். ஐவனம் - மலைநெல். தேவராளன் - சன்னதக்காரன் (58) சேடை - மாக்காப்பு.

(59) தசும்பு - குடம். (60) அவிந்ததென்றுனென்பது உம் பாடம். (61) இளி - இசை. (63) தோன்றி - காந்தள்.

(64) தவன் - கணவன். (66) புளினம் - மணற்குவியல். அடுக்கல் - மலை. (70) மழவிடையென்பது - முன்னிலைக்கண்வந்த வுவமையாகுபெயர். (72) கண்ணேறு - திருஷ்டிதோஷம்.

(73) தொடுதோல் - பாதரக்ஷை.

(76) வெடிபடுகுரல் - கடுந்தொனியானகுரல்.

(80) ஒடியெறிதல் - காடுகளைவெட்டல். (81) விளி-ஒலி.

(86) எய், (87) முளவு என்பன முட்பன்றி.

(88) நூழிலாட்டல் - கொன்று குவித்தல்.

(92) மதவலியென்பது - முன்னிலைக்கண்வந்தபண்புப் பொருளையுணர்த்திநின்ற பண்புப்பெயர் வருமிடந்தோறும் - இங்ஙனமேகொள்க. (97) ஆதன் - குருடன். (98) எண்கு - கரடி.

(99) அழுங்கு - ஓர்மிருகம். (102) மாலூரம் - வில்வம்.

(106) (107) கிடி, மோழல் என்பன பன்றி. அரணி - தீக்கடைகோல். (109) (110) கல்லை, தளிகை என்பன உண்கலம்.

(113) தலையிலிருந்த கமழலருந்தளிரு மெடுத்திறைஞ்சிச் சூட்டியென்பதற்கு - தம்மாற்றந்தலைபிற் செருகப்பட்டிருந்த நறுமணங்கமழ்கின்ற நன்மலர்களையுந் தளிர்களையும் - அத்தலையை யுயர்த்திவளைத்து அப்பிரானது திருமுடிக்கண் சாத்தியென்பது பொருள். இப்பொருளிச்சருக்கத்து நூற்றைம்பதாவது செய்யுளினுங்காண்க.

(117) குரிசில் - பெருமையிற்சிறந்தோன் அரசன்.

(120) வசித்தல் - வசப்படுத்துதல். (123) உருவம்-நிறம்.

(141) உழுவலன்பு - விடாதுதொடர்ந்தவன்பு.

(151) வெந்திறலென்பது - பெயர். (153) ஒத்து-வேதம்.

(160) வையாறு - துன்பம். (165) தந்தென்பதற்குக் . கொண்டுவந்தென்பதுபொருள.

(173) கண்ணப்பநிற்கவென மூக்கான் மொழிந்து கரம் பற்றியருளியமை. கடைச்சங்கத்துத் தலைமைப்புலவராகிய நக்கீர தேவநாயனார் திருக்கண்ணப்பதேவர் திருமறத்துள் "நில்லு கண்ணப்ப நில்லுகண்ணப்பவென் — னன்புடைத்தோன்ற னில்லு கண்ணப்பவென் — றின்னுரையதனொடு மெழிற்சிவலிங்கந் — தன்னி டைப்பிறந்த தடமலர்க்கையா — லன்னவன்றன்கையம்பொடுமகப் படப்பிடித் — தருளின னருளலும் -- விண்மிசைவானவர் — மலர் மழைபொழிந்தனர் வளையொலிபடகந் -- துந்துபிகறங்கின தொல்சீர் முனிவரு — மேத்தினரின்னிசைவல்லே — சிவகதிபெற்றனன்றிருக் கண்ணப்பனே" என அருளிய வாற்றானும் உணர்க.

கறையண்ணல் - விடந்தங்கியகிழ்வாய்.

கண்ணப்பச்சருக்கத்தின் குறிப்புரை

முற்றிற்று.

எட்டாவது

நக்கீரச்சருக்கத்தின் குறிப்புரை

செய்யுள் (7) அகடார்த்துதல் - வயிற்றைநிறைத்தல்.

(9) சாவவென்புழி - வகரவகரந் தொக்கது.

(12) இலஞ்சி - ஏரி. குணில் - குறுந்தடி.

(13) கொடிச்சியர்-குறிஞ்சிநிலப்பெண்கள், கடைச்சியர்-மருதநிலப்பெண்கள். (14) எயிற்றியர்-பாலைநிலப்பெண்கள். குடத்தியர் - மருதநிலப்பெண்கள். (15) பரத்தியர்-நெய்தனிலப் பெண்கள். (18) தொடுதல்-தோண்டல். இமில்-எருதின்முரிப்பு. மூரி - வலிமை.

(20) குழிசி - பானை. கானல் - நெய்தனிலம்.

(24) வம்பலர் - புதியோர். சாலம் - கூட்டம்.

(27) வேரம் - செய்குன்று. (30) உரு - நிறம்.

(40) தரியார் - பகைவர். (51) உரோணி-உரோகணிநாள். கரியவன் - சனி. ஈருவா - அமாவாசை பூரணை. ஞாலமைந்தன்-செவ்வாய். (53) பீள் - இளங்கதிர். பெண்ணை - பனை.

(54) பதம் - சோறு. (55) அடகு - இலைக்கறி. கந்தம்-கிழங்கு. (58) வற்கடம் - கருப்புக்காலம். (61) கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி —— காமஞ்செப்பாது கண்டது மொழிமோ—பயிலியது கெழீஇய நட்பின்—மயிலியற்செறியெயிற் றரிவைகூந்தலி—னறியவுமுளவோ நீயறியும்பூவே, என்னும் திருமுகப்பாசுரம். (62) மருகன் - வழித்தோன்றல்.

(65) சில் - பொன்வட்டத்தகட்டணி.

(68) ஆணுமை - நீங்காமை.

(80) இனைதல் - வருந்தல். தண்ணடை - நாடு.

(91) ஆலல்-ஆடல். சிரல் - மீன்குத்திப்பறவை. வாயில்-[தூது.

(96) ஆழிவெற்பு - சக்கரவாளகிரி.

(108) கண்ணுதல் - கருதல்.

(115) செம்மல் - எப்பொருட்குமிறைவன்.

(121) உருதல் - பொடிபடுதல்.

நக்கீரச்சருக்கத்தின் குறிப்புரை

முற்றிற்று.